விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 28 சனிக்கிழமை (14.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360

## உழவுஇயந்திரத்தின் சில்லுக்குள் அகப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

### மணல் ஏற்றச் சென்றபோது நாவற்குழி தெற்கில் சம்பவம்

(நாவற்குழி)

உழவுஇயந்திரத்தின் சில்லுக்குள் அகப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாவற்குழி தெற்கு கடற்கரையோரப் பகுதியில் மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தில் ஏறிச் சென்றபோது குறித்த குடும்பஸ்தர் தவறி விழுந்து சில்லுக்குள் அகப்பட்டு மரணமடைந்துள்ளார்.

சடலம் யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது .

இந்த சம்பவம் நாவற்குழி தெற்கு பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம் 23

## இயக்கச்சியில் தனியார் பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

### இளம் குடும்பஸ்தர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு



(கிளிநொச்சி)

பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஏ9 பிரதான நெடுஞ்சாலையில் உள்ள இயக்கச்சி, கரந்தாய் 23

# இலங்கை பௌத்த நாடு

### யாழில் இராணுவத்தினருக்கு முன்பாக பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ன



*(யாழ்ப்பாணம்)* இலங்கை ஒரு பௌத்த நாடு. மக்கள் தமது சொந்த மதங்களை பின்பற்றுவதற்கான உரிமையுள்ளது. அனைத்து மதத்தினரும் அமைதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவது முப்படையினரின் கடமையாகும் என இராணுவத்தினர் முன்பாக யாழில் தெரிவித்தார் பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன. 23

### 4ஆவது நாளாக நேற்றும்

## சி.ஐ.டியில் முன்னிலையான சுவிஸ் தூதரக பணியாளர்

(கொழும்பு)

கடத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் சுவிஸ தூதரக பணியாளர் கானியா பெனிஸ்டர் நேற்று நான்காவது தடவையாக சி.ஐ.டியில் முன்னிலையானார்.

நேற்று முன்தினம் நடந்த வழக்கு விசாரணையின்போது, சுவிஸ் தூதரின் இல்லத்தில் வாக்குமூலம் பெற 23

### இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒழிக்க

## இராணுவத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

புதிய இஸ்லாமிய தீவிர வாதத்தை இல்லாதொழிப்பதற்கு இராணுவத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும். நாட்டு மக்கள் என்றும் இராணுவத்தினரை கௌரவிப்பார்கள் என பிரதமர் மகிந்த ராஜ 23

## நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை

### யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் வடக்கில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக யாழ்ப் பாண மாவட்ட அர 23

## இலங்கையின் இராணுவ செயற்பாடுகளில் சர்வதேச தலையீட்டை ஏற்க முடியாது

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இராணுவச் செயற்பாடுகளில் சர்வதேசத்தின் தலையீட்டினை ஏற்றுக் கொள்ள முடியாது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் உத்தியோகத்தர்கள் கல்லூரியின் பட்டமளிப்பு தாமரைத் தடாகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தற்கொலைக் குண்டுத் 23



## பிரிட்டன் பொதுத் தேர்தல் கொன்சர்வேடிவ் கட்சி வெற்றி

### த்மிழருக்கு ஆதரவாக செயற்படும் போரிஸ் ஜோன்சன் பிரதமராகுகிறார்

(லண்டன்)

பிரிட்டனில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் கொன்சர் வேடிவ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

தமிழருக்கு ஆதரவாகச் செயற்படும் போரிஸ் ஜோன்சன் மீண்டும் பிரித்தானிய பிரதமராகு கிறார். 16

## இரணைமடுவின் நீர்மட்டம்

### மீண்டும் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் நேற்று மீண்டும் உயர் வடைந்துள்ளது.

நேற்று வரைக்கும் பெய்த மழை காரணமாக 23

### தமிழகத்தில் அகதிகளாக உள்ள

## இலங்கைத் தமிழருக்கு பிரச்சினை ஏற்படாது

### பா.ஜ.க அறிவிப்பு

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் விரட்டப்படுவார்கள் என்ற காரணத்தினா 23

## யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் மீண்டும் தோல்வி

### ஆதரவாக 19 எதிராக 24

யாழ்.மாநகர சபையின் பட் ஜெட் மீண்டும் 2வது தடவையாக தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஆதரவாக 19 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் பெறப்பட்டன. 08

## இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகள் மீண்டும் இலங்கை வர வேண்டும்

### விரைவில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை த.தே.கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் புதிய குடியுரிமை திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட் டுள்ள நிலையில் இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக சட்டத் திருத்தத்தில் 23

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## கணபதிப்பிள்ளை சபாநாயகம்
(ஓய்வு பெற்ற கணிதபாட ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரி.)



மண்ணில் : 12.12.1950
விண்ணில் : 28.11.2015

தாயாக தந்தையாக தனையனாகச் சகோதரனாக
கல்வியில் நல்ல ஆசானாக கண்ணியமாய் மண்ணுலகிலே
வாழ்ந்துவிட்ட நீங்கள் விண்ணுலகம் நோக்கி
விரைவாகப் பறந்ததேனோ
விடை காண முடியாமல் விசனத்துடன் விழிக்கிறோம்
மாண்டவர் மீண்டும் பூமிக்கு வருவது
புராண சரித்திர வரலாறு
நீங்களும் வருவீர்களென வழிமேல் விழி வைத்து
வாசலில் காத்திருக்கின்றோம்
ஆறாத் துயருடன் ஆண்டுகள் நான்கு சென்றுவிட்டது
நான்கு ஆண்டென்ன நான்கு யுகம் சென்றாலும்
உங்கள் நினைவுதான் எங்கள் நினைவு



-குடும்பத்தினர்

(C-8534)



கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்றையதினம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் றைனா ஜொறான்லி எஸ் கெடவ் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# கேள்வி கோரல்

எமது வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியின் நவாலியிலுள்ள தொழிற்சாலை வளவில் பின்வரும் வேலை செய்வதற்கு கேள்வி கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரியில் தொடர்பு கொண்டு கேள்வி விண்ணப்பபடிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கவும்.

| விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | கேள்விப்பத்திர கட்டணம் |
|---|---|---|
| மதிலும் இரும்புகேற்றும் அமைத்தலும் | 13000/- | 1500/- |

- ➢ விண்ணப்பப்படிவம் வழங்கப்படும் திகதி - 21.12.2019 காலை 10.00 மணி வரை
- ➢ விண்ணப்பப்படிவம் ஒப்படைக்கப்படும் முடிவுத்திகதி -23.12.2019 காலை 10.00 மணி வரை
- ➢ கேள்வி விண்ணப்பம் திறத்தல் - 23.12.2019 நண்பகல் 12.00 மணி

**நெறியாளர் குழுவின் தீர்ப்பே இறுதி முடிவானதாகும்.**
**தலைவர்,**
**வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச கொத்தணி,**
**பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்.**

(C-8530)

# முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
# நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி - 2020/2021

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- கற்கைநெறிக்கான காலம் - ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
- கற்பிக்கப்படும் மொழி - தமிழ்
- விண்ணப்பிப்பதற்கான தகுதி - க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- கற்கைநெறிக்கான கட்டணம் - ரூபா. 31,250/-

**கட்டண விபரம் :**

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் | - | 2,500.00 |
| கல்விக் கட்டணம் | - | 23,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - | 5,000.00 |
| நூலகக் கட்டணம் (திரும்பப் பெறத்தக்கது) | - | 750.00 |
| மொத்தம் | - | 31,250.00 |

- **விண்ணப்ப முடிவுத் திகதி - 28.02.2020**
- **விண்ணப்பிப்பதற்கான முறை :**

விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணமாக ரூபா 300 ஐ செலுத்தி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவங்களைத் தபால்மூலம் அனுப்புவதாயின் **இணைப்பாளர், நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு, கடிதஉறையின் இடது பக்க மேல்மூலையில் **"நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும். இணையத்தளம் ஊடாகவும் விண்ணப்பங்களை தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**மேலதிக தொடர்புகளுக்கு : 021 222 3610**
www.maco.jfn.ac.lk

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(C-8533)

# குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலுடன் இணைந்து புதிய பயிற்சியாளர்களுக்கும் மாணவ மாணவியருக்கும ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளது. மாணவ மாணவியருக்காக இரு பெரும் முதுநிலைப்பேராசிரியர்களால் பயிற்சி நடாத்தப்படவுள்ளது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் கவனத்திற்கு. உங்களது செல்வங்களுக்காகவே உழைத்து ஓடாத்தேயும் நீங்கள் உடல்நலத்தோடு வாழவும் உங்களது செல்வங்கள் எதிர்காலத்தில் கல்வி ஒழுக்கம் உடல்நலத்தில் கவனம் செலுத்தியே ஆகவேண்டியவர்களாவீர்கள். அதற்கு அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை பயிற்சிகள் தவிர வேறு ஒரு தீர்வு இனி உலகில் இல்லை. உங்களுக்காகவே இருபெரும் மனவளக்கலை பேராசிரியர்கள் தமிழகத்தில் இருந்து அழைக்கப்படுகிறார்கள். இவ்வாரத்தில்இருந்து அவர்களே பயிற்சி வழங்க இருப்பதினால் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்" என்ற வாசகத்திற்கு அமைய இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- ➢ **எளியமுறை உடற்பயிற்சிகள்**
- ➢ **எளியமுறை தியானப்பயிற்சிகள்**
- ➢ **காயகல்ப்பப் பயிற்சி**
- ➢ **அகத்தாய்வுப் பயிற்சிகள்**

காலம் : 14.12.2019 சனிக்கிழமை தொடக்கம் 20.12.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் : **மனவளக்கலை பேராசிரியை ச.இந்திரா, மனவளக்கலை பேராசிரியர் சுப்பிரமணியம் (Bsc.Physics. MA. YHE), துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

**அகத்தாய்வு 1ம் நிலை 14.12.2019 சனி மற்றும் 15.12.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.**

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:021 222 2772.** (C-8532)

CNR WORLD WIDE EXPRESS & TRAVELS
(அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு)
சி.என்.ஆர் எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை
- வெளிநாட்டு / உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் (Air Ticket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் / ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)

401, Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகில்)
அழையுங்கள் : 077 293 1062
(C-8531)

## “குடியுரிமை திருத்தச் சட்டத்தை வாபஸ் பெறு”

# இலங்கை அகதிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் நேற்று கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை சென்னை சைதாப்பேட்டையில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்ராலின் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் காப்பாற்று. காப்பாற்று இலங்கை அகதிகளை காப்பாற்று. இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பாதே. குடியுரிமை திருத்த சட்டத்தை வாபஸ்பெறு" ஆகிய கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் குடியுரிமை சட்டத்துக்கு ஆதரவு அளித்த தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டகாரர்கள் முழக்கமிட்டனர்.

அதன் பின்னர் குடியுரிமை சட்டத் திருத்த நகலை ஆர்ப்பாட்காரர்கள் கிழித்து எறிந்தனர்.

இதனையடுத்து வீதி மறியலில் ஈடுபட்ட உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான இளைஞர் அணியினரை பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட உதயநிதி ஸ்டாலின் இலங்கை தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறினார்.

அத்துடன் இந்திய மத்திய அரசு புதிய குடியுரிமை சட்ட திருத்தத்தை மீளப் பெறும் வரையில் போராட்டம் தொடரும் எனவும் எச்சரித்தார்.

எவ்வாறாயினும் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழும் இலங்கையர்களுக்கு ஒருபோதும் குடியுரிமை வழங்கப்படமாட்டாது என இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் நித்தியானந்த ராய் அண்மையில் தெரிவித்திருந்தார்.

30 வருடங்களுக்கும் மேலாக இந்தியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்கப்படுமா? என விழுப்புரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் இந்திய பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த இந்திய மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் இலங்கையர்களுக்கு ஒருபோதும் இந்திய குடியுரிமை வழங்கப்படமாட்டாது என திட்டவட்டமாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்திய மக்களவையில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமை சட்ட திருத்த சட்டம் மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் குறித்த திருத்த சட்டத்திற்கு ஜனாதிபதி நேற்று கையெழுத்திட்டு ஒப்புதலை வழங்கினார்.

இதனால் திருத்தப்பட்ட குடியுரிமை சட்டம் வெகுவிரைவில் அமுல்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## டெங்கு நோய்த்தாக்கம் அதிகரிப்பு

# பராமரிப்பில்லாத தனியார் காணிகளை பிரதேச சபைகள் கையகப்படுத்த முடியும்

## யாழில் நேற்று நடந்த கூட்டத்தில் பரிந்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பராமரிப்பில்லாத நிலையில் டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்புகள் பெருகக்கூடிய காணிகளை அப்பகுதி பிரதேச சபைகள் கையகப்படுத்த முடியும் என பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டது.



வெளிநாடுகளிலோ அல்லது பிற மாவட்டங்களிலோ வசிக்கும் தனியாருக்குச் சொந்தமான காணிகள் பல பற்றைக்காடுகளுடன் காணப்படுவதுடன்டெங்குநோயைப் பரப்பும் நுளம்புக் குடம்பிகள் உருவாக்கக்கூடிய அபாயகரமான சூழலுடன் காணப்படுவதாக குறித்து கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகக்கூடிய சூழலை வைத்திருக்கும் தனியார் காணிகளுக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் எச்சரிக்கைப் பிரசுரம் ஒட்டப்பட்டு குறித்த நாளுக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும்.

அதன் பின்னரும் சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றாத தனியார் காணிகளை பிரதேச சபைச்சட்ட திட்டங்களுக்கு அமைய பிரதேச சபைகள் கையகப்படுத்த முடியும்.

குறித்த தனியார் காணிகளின் உரிமையாளர்கள் சோலை வரி மற்றும் அக்காணியால் ஏற்பட்ட நட்டஈடு என்பவற்றை பிரதேச சபைக்கு செலுத்திய பின் காணிகளை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-18)

# மிலேனியம் மானியம் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும்

## உயர் நீதிமன்றில் சட்டமா அதிபர்

(கொழும்பு)

அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் மானியம் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும் என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு தெரிவித்தார்.

அத்துடன், இதுவரை அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் மானியம் குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்கப்படவிருந்த அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் மானியம் நிராகரிக்கப்படவில்லை என அமைச்சர் டளஸ் அழகப்பெரும நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். இந்நிலையில் நேற்று சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவை, 480 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான மிலேனியம் சவால்கள் நிறுவனத்தின் கொடைக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொதுத் தேர்தலை மையப்படுத்தி 50 நாள் வேலைத்திட்டம் -ஜே.வி.பி

(கொழும்பு)

பொதுத் தேர்தலை மையப்படுத்தி 50 நாள் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது. மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்வரும் பொதுத் தேர்தலை மையமாகக் கொண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி 50 நாள்வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் வீழ்ச்சியடைந்த வாக்குகளை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அமைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி என்ற அமைப்பின் ஊடாகவே பொதுத் தேர்தலிலும் களமிறங்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி அண்மையில் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# ஐ.பி.எல் தொடருக்கு தயாராகிறது இந்தியா

# ஏல வர்ணனையில் இடம்பெறவுள்ளது தமிழ்

இந்தியாவில் நடைபெறும் ரி-20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்திற்கான தயார்படுத்தல்கள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டு வீரர்களை உள்ளடக்கிய ஐ.பி.எல் ரி-20 கிரிக்கெட் தொடர், கடந்த 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்தியாவில் சிறந்த உள்ளூர் வீரர்களை இனங்காண்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இத்தொடர், சர்வதேச வீரர்களின் வருகையால், இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் இரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.




இதற்கமைய ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்திற்காக தற்போது ஒவ்வொரு அணிகளும் தங்களின் அணிகளை வலுப்படுத்தும் வகையில், புதிய பயிற்சியாளர்களை நியமிப்பதோடு, திறமையான வீரர்களுக்கும் வலைவிரிக்கின்றன.

2020ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், இத்தொடர் ஏலம் எப்போது நடக்கும், எத்தனை மணிக்கு நடக்கும், எத்தனை வீரர்கள் பங்கேற்பார்கள் என்பது குறித்த விபரங்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு முன்னைய ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலம் அனைத்தும் பெங்களூருவில் நடந்தது. ஆனால், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் புதிய தலைவர் கங்குலி பதவி ஏற்றுள்ளதையடுத்து இந்த முறை ஏலம் கொல்கத்தாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்படி வரும் 19ஆம் திகதி ஐ.பி.எல். ஏலம் நடைபெறவுள்ளது

முதலில் திட்டமிட்டபடி ஏலம் 19ஆம் திகதி காலையில் நடப்பதாக இருந்தது. ஆனால், இரசிகர்கள் அதிகமானோர் ஏலத்தைக் கண்டுகளிக்க வேண்டும் என்பதற்காக ஐ.பி.எல் ஏலத்தின் நேரம் காலை 10 மணிக்குப் பதிலாக பிற்பகல் 2.30 மணிக்கு ஏலம் தொடங்குகிறது.

வழக்கமாக வீரர்கள் ஏலம் குறித்த அறிவிப்புகள் ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இரு மொழிகளில் மட்டுமே வர்ணனை செய்யப்படும். ஆனால், முதல் முறையாகப் பிராந்திய மொழிகளாகத் தமிழ், தெலுங்கு, வங்காளம், கன்னடம் ஆகிய மொழிகளில் நேரலை வர்ணனை செய்யப்பட உள்ளது.

இந்த ஐபிஎல் ஏலத்தில் மொத்தம் 8 அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர். இதில் ஏலத்துக்காக வெளிநாடு, உள்நாடு என மொத்தம் 971 வீரர்கள் தங்களைப் பதிவு செய்திருந்தார்கள். ஆனால், இதில் 332 பேர் மட்டுமே ஏலத்துக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஐபிஎல் போட்டியில் ஏற்கெனவே விளையாடிய அனுபவம் உடைய 19 இந்திய வீரர்கள், 24 புதிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் மேற்கிந்திய தீவுகள் வீரர் கேஸ்ரிக் வில்லியம்ஸ், பங்களாதேஷ் அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹிம், அவுஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர் ஆடம்சம்பா ஆகியோர் முதல் முறையாக இடம் பெறுகிறார்கள்.

8 அணிகளிலும் தற்போது 73 வீரர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. இதில் அதிகபட்சமாக 29 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெறுவார்கள்.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 12 ஐ.பி.எல். தொடர்களில், டெல்லி கேப்பிடல்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றதே கிடையாது.

ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கன் சார்ஜஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகள் தலா ஒருமுறையும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மூன்று முறையும், கொல்கத்தா அணி இரண்டு முறையும், மும்பை இந்தியன்ஸ் அணி நான்கு முறையும் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன.

## ஆஸிக்கெதிரான டெஸ்டில் தடுமாறுகிறது நியூசிலாந்து

நியூஸிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸிற்காக அவுஸ்திரேலியா அணி 416 ஓட்டங்களை குவித்துள்ளது.

பெர்த் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீரமானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி, முதல்நாள் ஆட்டநேர முடிவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 248 ஓட்டங்களை பெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று போட்டியின் இரண்டாவ்து நாளை தொடங்கிய அவுஸ்திரேலியா அணி, 416 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில், அவுஸ்திரேலியா அணி சார்பில், டேவிட் வோர்னர் 43 ஓட்டங்களையும், ஜோ பர்ன்ஸ் 9 ஓட்டங்களையும், மார்னஸ் லபுஸ்சேகன் 143 ஓட்டங்களையும், ஸ்டீவ் ஸ்மித் 43 ஓட்டங்களையும், மெத்தியு வேட் 12 ஓட்டங்களையும் ட்ராவிஸ் ஹெட் 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேலும், டிம் பெய்ன் 39 ஓட்டங்களையும், பெட் கம்மின்ஸ் 20 ஓட்டங்களையும், மிட்செல் ஸ்டாக் 30 ஓட்டங்களையும், நாதன் லியோன் 8 ஓட்டங்களையும், ஜோஷ் ஹெசில்வுட் ஓட்டமெதுவும பெறாத நிலையிலும் களத்தில் இருந்தனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தீ மற்றும் நெய்ல் வாக்னர் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், கொலின் டி கிராண்ட்ஹோமி மற்றும் ஜீட் ராவல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் நியூஸிலாந்து அணி, 5 விக்கெட்டினை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வருகின்றது.

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 23 - 12 - 1952



ஆண்டவன் அடியில் 13 - 12 - 2019

### திருமதி தில்லையம்பலம் கமலாம்பிகை

நெடுந்தீவு மேற்கினைப் பிறப்பிடமாகவும் வன்னேரிக்குளத்தினை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கமலாம்பிகை அவர்கள் நேற்று *(13.12.2019)* வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -மனோன்மணி தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் மருமகளும், அமரர் கணபதிப்பிள்ளை, கமலாதேவி, சீதாலச்சுமி, சந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருநாவுக்கரசு (திரு) (உரிமையாளர் விஸ்ணு பல்பொருள் வாணிபம் - ஸ்கந்தபுரம்), வசந்தகுமாரி (வசந்தா), காலஞ்சென்ற உதயகுமார் ஜெகதீஸ்வரன் (சுதன்), ஜெயசீலன் (மனோ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கவிதா (புத்தளம்), விக்கினராசா (சந்திரன் - வன்னேரி), விஜிதா (வன்னேரி), ஜீவா (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கார்த்திகா, கஜன், விஸ்ணு, கிருஷாந், கபிசன், கஜானா, கவிசாளினி ஆகியோரின் அப்பம்மாவும், விஜிதரன் (சுவிஸ்), வினோதரன், விதுஷா (பெரன்டினா மைக்றோ பினாஸ்), தாரணி, துஷாந் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 90/3, ஐயனார்புரம், வன்னேரிக்குளம் என்னும் முகவரியிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நாளை *(15.12.2019)* ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் ஐயனார்புரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-1475)

தொடர்புகளுக்கு:
0772855884 (திரு), 0777754895 (மனோ)

தகவல்:-
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு **சு. பகீரதன்** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
### சிவமணி சுந்தரலிங்கம்

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகமும்**
**காணி மாவட்டப் பதிவகமும், யாழ்ப்பாணம்**

(1476)

# சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துங்கள்

## ஜனாதிபதிக்கு சிறீதரன் எம்.பி.கடிதம்



(யாழ்ப்பாணம்)

கல், மண் மற்றும் மணல் ஏற்றுவதற்கான அனுமதியை இரத்துச் செய்வதாக கடந்த 2019.12.03 ஆம் திகதி தங்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல மாவட்டங்களில் மிக மோசமான வகையில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு யாழ்.-கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மணல் அகழப்படும் இடங்களில் இயற்கைக்கு பாதிப்பற்ற வகையில் புவிச்சரிதவியல் திணைக்களம், அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், பிரதேசசபை, சுற்றுச்சூழல் திணைக்களம், தொல்பொருட் திணைக்களம், கடலோர காவல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றின் அனுமதிகளை முறைப்படி பெற்ற பின்னரே அரச மற்றும் தனியார் காணிகளில் நில மட்டத்திற்கு மேலுள்ள மணலை அகழ முடியுமென்பது சட்டத்தினூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தின் அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் நிலத்திற்கு 15அடிக்கு கீழுள்ள மணல் அதிகளவில் அகழப்பட்டதால் நன்னீர்ப் பிரதேசங்கள் உவர் நிலங்களாக மாற்றம் பெற்று அப்பகுதிகளில் மக்கள் குடியேறி வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தின் கிளாலி, கௌதாரிமுனை உள்ளிட்ட பகுதி மக்கள் தமது சொந்த நிலங்களில் வாழ முடியாது உள்நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்ந்து வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்லாறு, பன்னங்கண்டி, வன்னேரிக்குளம், திருவையாறு, கண்டாவளை போன்ற பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை, அளம்பில் போன்ற பகுதிகளிலும் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் சட்டவிரோத மணல் அகழ்வினால் இயற்கை மரங்கள் அழிக்கப்பட்டு மனித இனம் குடியேறி வாழமுடியாத அளவுக்கு அபாயகரமான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலை தொடருமானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் இன்னும் சிலவருடங்களில் எந்த வளங்களுமற்ற அநாதைகளாக மாற்று இடங்களில் குடியேறி வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

மூன்று தசாப்தகால போரும், சமாதானமும் எமது மக்களுக்கான நிரந்தர அமைதியை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்பதும், இந்தநாட்டின் அதிகார பீடங்களில் இருந்தவர்கள் அதற்கு முன்வரவில்லை என்பதும் வரலாறு தந்த துயரங்கள்.

இந்நிலையில் தற்போது துப்பாக்கிகளும், குண்டுகளும், வன்முறையும் இல்லாத போதும் கூட எமது மக்கள் சொந்த நிலங்களிலிருந்து தாமாகவே இடம் பெயர வேண்டிய செயற்கைச் சூழலை உருவாக்குவதற்கு தங்களின் 2019. 12.03 ஆம் திகதிய அறிவிப்பு அடித்தளம் இட்டிருக்கிறது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நீட்சியின் அடுத்த கட்டமாக அவர்களது பொருளாதாரம் மற்றும் இருப்பு என்பன மடிவலையூடாக கடல்வளமும், மணல் அகழ்வு ஊடாக இயற்கை வளமும் அழிக்கப்படுவதனூடாக வடக்கு, கிழக்கு மக்களின் இயல்பு வாழ்வையே கேள்விக்குட்படுத்துகிறது.

எனவே தயவுசெய்து, இந்த நாட்டின் 7ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள தாங்கள் இவ்விடயத்தில் நேர்மையுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இக்கடிதத்தை தங்களுக்கு அனுப்பிவைக்கிறேன் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# நகரசபைக்குத் தெரியாமல் கடைகளை கைமாற்றிய ஒப்பந்தகாரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

- சட்ட முறைகளைப் பின்பற்றாது கடைகளைப் பெற்றோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்
- அதிக வாடகையால் வர்த்தகர்கள் கடன் சுமையில்; நகர சபைக்கு வருமான இழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான கடைத்தொகுதிகளை ஒப்பந்தகாரர்கள் ஒப்பந்த நடைமுறையை மீறி விற்பனை செய்துள்ளதாக சபையில் நகர சபை உறுப்பினர் சு.நிதிகேசன் சுட்டிக்காட்டியதையடுத்து சாவகச்சேரி நகரசபையினர் அவ்வாறு நகரசபையின் ஒப்பந்தங்களை துஷ்பிரயோகம் செய்த ஒப்பந்தகாரர்களுக்கு எதிராக எதிர்வரும் தை மாதம் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தனர்.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மண்டபத்தில் இடம்பெற்ற போதே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நிதிகேசன் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான புதிய மாடிக் கட்டடத் தொகுதியிலுள்ள சில கடைகள் நகரசபையால் ஒப்பந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டன. இந்நிலையில் ஒப்பந்தகாரர்களினால் நகரசபையின் ஒப்பந்த நடைமுறையை மீறி கைமாற்றியும், விற்பனை செய்யப்பட்டும், நகரசபையின் வரித்தொகையை விட பன்மடங்கு வாடகைக்கும் விடப்பட்டுள்ளன.

இதனால் பல கடைகள் மேலதிக பணத்தை செலுத்த முடியாமல் மூடப்பட்டுள்ளன. இச்செயற்பாடானது நகரசபைக்கு வரக்கூடிய வருமானத்தை இல்லாது செய்யும் நடவடிக்கையாகும்.

இதனால் வர்த்தகர்கள் சாவகச்சேரி நகரை விட்டு வேறு இடங்களுக்கு கடைகளை மாற்றம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

உறுப்பினரின் இக்கருத்திற்கு சகல உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததுடன், நகர சபையினர் அதிரடியாக சபையில் தீர்மானம் ஒன்றினையும் நிறைவேற்றி குறித்த தீர்மானம் எதிர்வரும் தைமாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் எனவும் உறுதியளித்தனர்.

குறித்த தீர்மானத்தில் சாவகச்சேரி நகரசபையிடம் இருந்து ஒப்பந்த அடிப்படையில் கடைகளைப் பெற்றவர்கள் எந்தக் காரணம் கொண்டும் அக் கடைகளை விற்கவோ, வேறு நபர்களுக்கு வாடகைக்கு வழங்கவோ அல்லது உரிமம் மாற்றம் செய்ய முடியாது.

அவ்வாறு செய்திருந்தால் நகரசபை ஒப்பந்த அடிப்படையில் அது செல்லுபடியற்றதாகும். அவ்வாறு விற்பனை செய்த ஒப்பந்தகாரர்கள் சட்டத்தின் முன்னிறுத்தப்படுவார்கள். நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள சகல கடைகளும் நகர சபைக்குச் சொந்தமானது.

எனவே வேறு நபர்களிடம் விலைக்கோ அல்லது வாடகைக்கோ கடைகளைப் பெற்று நடத்தும் வர்த்தகர்கள் உடனடியாக நகரசபையைத் தொடர்புகொள்ள வேண்டும். அவ்வாறானவர்களுக்கு நகரசபை நேரடியாக ஒழுங்கமைப்புக்களைச் செய்து கொடுக்கும் என அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையிடம் இருந்து பத்து இலட்சம் ரூபாய்க்கு ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடைகள் தற்போது ஒரு கோடி ரூபாய் வரைக்கும் நகரசபைக்குத் தெரியாமல் கைமாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேபோல் வாடகையும் நகரசபையின் வாடகையை விட பன்மடங்கு அதிகமாக வசூலிக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டது. (இ-30)

## இராசி பலன்

**மீனம்:** பேச்சில் தெளிவு பிறக்கும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மேடம்:** ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்கள் வாங்க முற்படுவீர்கள்.

**மிதுனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், எதிர்பாராத சில நன்மைகள் இடம்பெறலாம்.

**கடகம்:** காரிய அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்து செலவுகளால் திணறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** தொழில் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு கிடைக்கும், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.

**துலாம்:** கொடுக்கல்- வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கிரகநிலை
சந்திராஷ்டமம்
மூலம்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் ராகு |
| | இராசி பலன் | | |
| | | | |
| குரு,சுக் சனி,கேது | சூரி புத | செவ் | |

14.12.2019
கார்த்திகை 28,சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு
துதியை முற்பகல் 10.16 மணிவரை
திருவாதிரை முற்பகல் 7.32 மணிவரை
சுபநேரம் 3.21-4.51 மணிவரை
இராகுகாலம் 9.21-10.51 மணிவரை

வளவன்

# நுளம்புக்கு புகைவீசும் 10 இயந்திரங்கள் பழுது



(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயைப்பரப்பும் நுளம்புகளுக்கு புகை வீசும் பத்து இயந்திரங்கள் பழுதடைந்துவிட்டதாக யாழ்.பிராந்திய சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடலில் பிரதேச செயலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கே இவ்வாறு பதிலளிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் மிக வேகமாக அதிகரித்து வருகிறது. இந்நிலையில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்த இடம் என இனங்காணப்பட்ட பகுதிகளுக்கு புகையூட்டுவதற்குப் பாவிக்கும் இயந்திரம் தமது பிரதேச செயலகத்திற்கு போதாது எனப் பிரதேச செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் பழுதடைந்த இயந்திரம் தொடர்பில் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிமனையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் குறித்த இயந்திரங்களை உடனடியாகத் திருத்துவதற்குரிய ஒப்பந்த நடைமுறைகள் தம்மிடம் இல்லை எனத் தெரிவித்தார்.

எனினும் குறித்த சேவை வினைத்திறனாகச் செய்வதற்கு பிரதேச சபைகள் மூலம் புகை வீசும் கருவிகளை வழங்கினால் தமது சேவையை வினைத் திறனாக முன்னெடுக்க முடியும் என சுகாதாரப் பிரிவினரால் சுட்டிக் காட்டப்பட்டது. (இ-10)




# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2019/2020 கல்வியாண்டு மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் பாடநெறிகள் 2020 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை மும்மொழிக் கற்கை நிலையத்திலும் மாகாண கல்வித் திணைக்களத்தின் www.edudept.np.gov.lk என்ற இணையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து 30.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ தபால் மூலமோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

யா/கலட்டி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம் மேலதிக விபரங்களுக்கு 021223 1344 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# பருத்தித்துறை பிரதேச சபை பாதீடு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றம்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான பாதீடு சமர்ப்பிக்கும் விசேட கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பாதீட்டுக்கு ஆதரவாக 18 பேர் வாக்களித்தனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அமோக ஆதரவுடன் பாதீடு நிறைவேற்றப்பட்டது. (ஜ-5-60)

# இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறும்.

யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் ஏற்பாட்டில் திறந்த பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் என்.ராஜேந்திரா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி, பேராசிரியர் க.கந்தசாமி, கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியவில்லை



(கரணவாய்)

வெள்ளம் வழிந்தோடும் வீதியில் கொங்கிறீட் வீதி அமைக்கப்பட்டதன் காரணமாக வெள்ளம் ஓட முடியாது பிரதான வீதி பகுதியில் தேங்கி நிற்பதனால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட துன்னாலை வடக்கு சோழியவத்தை வீதி கம்பெரலிய திட்டத்தின்கீழ் கொங்கிறீட் வீதியாக அமைக்கப்பட்டது.

இவ்வீதியூடாக புலோலி தெற்கு தேவரன் பகுதியிலிருந்து வழிந்தோடி வரும் வெள்ளமும் மற்றும் துன்னாலை பகுதியூடாக வழிந்தோடி வரும் வெள்ளமும் இவ் வீதி ஊடாகப் பாய்ந்து செல்வது வழமை. ஆனால் அவ் வீதி கொங்கிறீட் வீதியாக அமைக்கப்பட்டதாலும் அப்பகுதியில் சில ஏற்றங்கள் இருப்பதன் காரணமாகவும் வெள்ளம் வழிந்தோட முடியாது காணப்படுகிறது.(இ-5-60)



கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப்பின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சிறந்த சமூக சேவையாளருக்கான விருது கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரனுக்கு வழங்கப்பட்டது. இவ் விருதினை பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் எஸ்.ஜெகபாலன் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் இணைந்து நடத்தும் 11 ஆவது இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நடைபெறும். (இ

# பொற்பதி அறிவாலய கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 34 ஆவது மற்றும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 8 ஆவது கலை விழா இன்று 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பொற்பதி அறிவாலயத்தில் ''சரஸ்வதி முன்பள்ளி'', ''பொற்பதி அறிவாலயம்'' ஆகியவற்றின் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு அபிவிருத்தி மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி.எழிலரசி அன்ரன் யோகநாயகம், யாழ்.வலய ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், கௌரவ விருந்தினர்களாக மருதனார்மடம் றோயர் சேர்விஸ் நிலைய உரிமையாளர் கே.பாலசுப்பிரமணியம், கொக்குவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சிவானுஜன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கரணவாய், கலட்டி, ஐக்கிய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கலட்டி கிராமத்தில் சிரமதானப் பணிகள் நாளை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறும்.

எனவே, மக்கள் அனைவரையும் சிரமதானப் பணியில் இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-5)

# சிறுகதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சி.சிறீறங்கனின் "சிவப்பு கோடு" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பிரதான மண்டபத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சண்.வேலழகன் தலைமையில் நடைபெறும். (இ-5)

# நிலத்தடி நீர் சேமிப்பு கலந்தாய்வுக் கூட்டம்

(குப்பிழான்)

காரைநகர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் நீர்வளமுகாமை மற்றும் நிலத்தடி நீர் சேமிப்புத் தொடர்பாக யாழ். மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் சி.சர்வராசாவின் கருத்துப் பகிர்வுடனான கலந்தாய்வுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் இடம்பெறும்.

இக் கூட்டத்தில் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு காரைநகரின் நீர்வள மேம்பாட்டிற்குப் பங்களிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.(இ-18)

# கற்பக விநாயகர் ஆலயத்தில் பெருங்கதை விரதம் ஆரம்பம்

(குப்பிழான்)

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயப் பெருங்கதை விரதத் திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்தும் 21 தினங்கள் இடம்பெறவுள்ள இப் பெருங் கதை விரதத் திருவிழாவில் தினமும் பிற்பகல் 3 மணியளவில் அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சுவாமி உள்வீதியுலா வருதலும், பெருங்கதைப் படிப்பும் நடைபெறும்.

19 ஆம் நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியளவில் 1008 சங்காபிஷேகமும், சதுர்த்தி உற்சவமும், பிற்பகல் 3 மணியளவில் கஜமுகசங்கார உற்சவமும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் தைமாதம் முதலாம் திகதி புதன்கிழமை காலை 8 மணியளவில் மஹா கணபதி ஹோமமும், 108 கலச சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளன. (ஜ-5-18)

# 3600 சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது

(களனி)

சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்த ஒரு தொகை சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்றைய தினம் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து சுங்கவரி செலுத்தாமல் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சுமார் 3600 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் களனி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஜ)




கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் குட்டி சுட்டி முன்பள்ளியின் வருட நிறைவுக் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பணிப்பாளர் ஜெயா தம்பையா , கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர் ச.கணேஸ்குமார், இளைப்பாறிய அதிபர் சண்.வாமதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- குப்பிழான் செய்தியாளர்)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: 18 ¾ செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Dip.in Mass Media, அரசதொழில்
எதிர்பார்ப்பு:படித்தபெண் (உள்நாடு)
தொ.இ: B/045

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்:சதயம் 4
கி.பா: 26
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L, London
எதிர்பார்ப்பு: A/L,ஆங்கிலஅறிவு (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: B/3004

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 4
கி.பா: 20 ¾சூரி செவ் 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BFAபட்டதாரி அரசதொழில்
எதிர்பார்ப்பு: A/L,உத்தியோகம்(உள்நாடு)
தொ.இ: B/3005

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்:அத்தம்
கி.பா: 29 ½செவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Software Engineer, Project Manager - Dubai
எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில் (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: B/3012

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி 4
கி.பா: 16
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BAபட்டதாரி
எதிர்பார்ப்பு: Doctor, Engineer,உயர் பதவி (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/5584

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: 43செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:HND IT,தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: சுவிஸ் மட்டும்
தொ.இ: G/5598

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 12 ½
உயரம்: 160cm
தகைமை/தொழில்:B.Scநில அளவையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரிஆசிரியர்,Doctor, Engineer, Bank Manager, Surveyor (உள்நாடு)
தொ.இ: G/5615

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:பரணி 4
கி.பா: 70செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA,அரசஉத்தியோகம்
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம் சைவ போசனம். அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/5626

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# மோ.சைக்கிள்-கார் விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியின் 4ஆம் சந்தியில் நேற்று மோட்டார் சைக்கிள் ஒன்றும் காரும் மோதி விபத்துக்குள்ளாகின.

நேற்று மழை பெய்து கொண்டிருந்த நிலையில் குறித்த வீதியால் யாழ்.கச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் ஆனைப்பந்தி நோக்கி வந்து கொண்டிருந்த காரும் சந்தியைக் கடக்க முற்பட்ட நிலையில் விபத்துக்குள்ளாகின.

இச் சம்பவத்தில் யாருக்கும் பாதிப்பு ஏற்படாத நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)


# JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

## தேசிய தொழில்த் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் கா.பொ.த. (உயர்தரம்) சித்தியடையாதோர்.பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture** (விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிகள்) தமிழ் மொழி மூல பயிற்சி நெறிகள்.

**தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (ஒரு வருட காலப்பயிற்சி நெறி)**

தகைமை NVQ மட்டம் 3 அல்லது கா.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**பயிற்சிக் கட்டணம் இலவசம்.**

தமிழ் மொழி மூலமான பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 23.12.2019 காலை 9.00 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வி தகைமை சான்றிதழ்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு

பயிற்சி நெறி இணைப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

E.Mail : jcinstituteofariculture@gmail.com
தொலைபேசி: 021 224 1420


(C-8513)

# வன்புணர்வுக்கு எதிராய் எழுந்து நிற்போம்

## வவுனியாவில் குடையுடன் விழிப்புணர்வு பேரணி





(குருமன்காடு)

சமத்துவமான தலைமுறை, வன்புணர்வுக்கு எதிராய் எழுந்து நிற்போம் எனும் தொனிப் பொருளில் பெண்களால் ஊர்வலம் ஒன்று நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகமும் ஒபர் சீலோன் மற்றும் பொஸ்டோ நிறுவனமும் இணைந்து USAID மற்றும் UNDP நிறுவனங்களின் நிதி அனுசரணையுடன் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மஞ்சள் நிற குடையை பிடித்தவாறு வவுனியா மாவட்ட செயலக முன்றலில் இருந்து ஊர்வலமாக ஆரம்பித்து வவுனியா மாவட்ட செயலக உள்ளக வீதியூடாக மாவட்ட செயலக கேட்போர் கூடத்தினை சென்றடைந்து கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

இந் நிகழ்வில் கௌரவ விருந்தினராக மேலதிக மாவட்ட அரச அதிபர் ரி.திரேஸ்குமார், சட்டத்தரணி பகீர் முகமட் கிஸாம், என். வைதேசி (UNDP), எஸ்.சூரியகுமாரி (OFERR), பா.செந்தில்குமரன், பொஸ்டோ மற்றும் விருந்தினர்களாக, உள சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ் சுதாகரன், நகரசபை உறுப்பினர், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொலிஸார், பெண்கள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-250)

---


## தொடர் மழையால் பாதிக்கப்படும் தாழ்நில கிராம மக்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மீண்டும் கடும் மழை பெய்யத்தொடங்கியுள்ளதால் பல தாழ்நில கிராமங்கள் வெள்ளப்பாதிப்பை எதிர் கொண்டுள்ளதுடன் கதிர் விளைந்த நிலையில் நெற்செய்கைகளும் பாதிப்படைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்கள் மழை பெய்யாத நிலையில் நேற்று வெள்ளிக் கிழமை தொடக்கம் மீண்டும் கடும் மழை பெய்யத்தொடங்கியுள்ளது. குறித்த மழை காரணமாக மன்னார் மாவட்டத்திலுள்ள தாழ் நில கிராமங்கள் நீரில் மூழ்கும் ஆபத்தை எதிர் கொண்டுள்ளன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வெள்ளம் காரணமாக தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்ட மக்கள் சில நாட்களுக்கு முன்



பாக வீடுகளுக்கு சென்ற நிலையில் மீண்டும் கடும் மழை பெய்துள்ளது. இதனால் குறித்த மக்கள் மீண்டும் இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில் நெற்செய்கையில் தற்போது கதிர்கள் உருவாகும் காலப்பகுதி என்பதால் உருவாகியுள்ள கதிர்கள் மழை காரணமாக உதிரும் நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் பெய்த மழை காரணமாக 6000 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (9-285)

---

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்



(அக்கராயன்)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் மூன்று மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்டத்தை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சபையில் நேற்று முன்தினம் முன்வைத்தார். அந்த சந்தர்ப்பத்தில் குறித்த வரவு-செலவுத்திட்டத்திற்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சுயேட்சைக்குழுவின் 3 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

ஆதரவாக இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, சுயேட்சைக்குழுவின் துச்சோதனன் ஆகியோர் ஆதரவாகவும் வாக்களித்தனர். இதனால் சபையினுடைய 2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (9-350)

---

# யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் இரண்டாவது தடவையும் தோற்கடிப்பு

### ஆதரவாக-19, எதிராக 24 பேர் வாக்களிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் இரண்டாவது தடவையும் தோற்கடிக்கப்பட்டது.

இரண்டு தடவைகள் வரவு-செலவுத் திட்டம் சபையில் தோற்கடிக்கப்பட்டாலும் முதல்வரின் அதிகாரத்திற்கமைவாக குறித்த வரவு-செலவுத் திட்டம் முறைப்படி அங்கீகரிக்கப்பட்டதாக முதல்வர் இ.ஆனல்ட் பிரகடனப்படுத்தினார். யாழ்.மாநகர சபையின் விசேட அமர்வு மாநகர முதல்வர் ஆனல்ட் தலைமையில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்றது. இந்த அமர்வில் 43 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துகொண்டவர்களுள் வரவு-செலவுத் திட்டத்திற்கு 19 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 24 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 12 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

யாழ் மாநகரசபையின்2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முதலாம் வாசிப்பு கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்று, 28 ஆம் திகதி முதலாவது வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது வரவு-செலவு திட்டத்திற்கு 16 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 21 உறுப்பினர்கள் எதிராகவும்வாக்களித்த அதேவேளை 7 உறுப்பினர்கள் சபை அமர்வில் கலந்து கொண்டிருக்கவில்லை. இதைத்தொடர்ந்து, கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வின் மாநகர சட்டம் 215ஏ இன் பிரகாரம் வரவு-செலவுத் திட்டத்தை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும் என்றமுதல்வரின்கருத்துக்கு அமைவாக நேற்று வரவு-செலவுத் திட்டம் மீண்டும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# பொதுத் தேர்தல் வெற்றியை கருத்திற்கொண்டு இடைக்கால அரசாங்கம் செயற்படவில்லை

## இராஜாங்க அமைச்சர் ஜோன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பொதுத்தேர்தலின் வெற்றியை கருத்திற் கொண்டு இடைக்கால அரசாங்கம் தற்போது செயற்படவில்லை என்றும் தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பல பொதுத்தேர்தலுக்கு முன்னர் செயற்படுத்தப்படும் எனவும் பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கை தரம் இன்று உயர்வடைந்துள்ளதுடன் நாளாந்த செலவுகளும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன.

இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இறக்குமதி செய்யப்படும் உற்பத்திகளுக்கு இன்று பாரிய கேள்வி நிலவுகின்ற பட்சத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் விலையும் அதிகரித்த மட்டத்தில் காணப்படுகின்றது.

வாழ்க்கைச் செலவுகள் குறித்து ஆராயும் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய வழங்கப்பட்ட பொருள் விலைக்குறைப்பிற்கு அமைய தற்போது பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

அரிசி உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையினை குறைக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் தொட்க்கம் விலைக்குறைப்பு அமுல்படுத்தப்படும்.

ஜனாதிபதி தேர்தலின் வெற்றியினை தொடர்ந்து பொதுத் தேர்தலின் வெற்றியினை இலக்காகக் கொண்டு பொருட்களின் விலை குறைக்கப்படவில்லை.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அடிமட்டத்தில் இருந்து துரிதகரமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியாக உள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் முழுமையாக நிறைவேற்றப்படும். இடைக்கால அரசாங்கத்தில் மக்களுக்கு பயன் பெறும் பல விடயங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

அதன் பலன் மக்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் முழுமையாக கிடைக்கப் பெறும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

# நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து காலி சிவன் ஆலயம் வரை புனித திருத்தல தரிசன யாத்திரை, திருவாசம் முற்றோதல்

(குப்பிழான்)

இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபை இலங்கையில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம் இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையேயான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி மேற்கொள்ளும் புனித திருத்தல தரிசன யாத்திரை மற்றும் திருவாசகம் முற்றோதல் எதிர்வரும் - 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை-7.30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

பிரதான வீதி ஓரமாக அமைந்துள்ள ஆலய தரிசனாங்களுடன் கிளிநொச்சி கந்தன்குளம் செல்வாநகர் ஓம் சக்திவேலன் ஆலயம், முறிகண்டி பிள்ளையார் ஆலயம், வேப்பங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயம், சிலாபம் முருகன் ஆலயம், முன்னேஸ்வரம் சிவன் ஆலயம், கொழும்பு பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயம், பாணந்துறை முருகன் ஆலயம் ஆகிய ஆலய ங்களைத் தரிசித்துக் காலி சிவன் ஆலயத்தை யாத்திரை சென்ற டையும். தரிசன யாத்திரையில் அடியவர்கள் திருவாசகம் ஓதிய வாறு கலந்து கொள்வர்.

காலி சிவன் ஆலயத்தைச் சென்றடைந்ததும் அங்கு திருவாசகம் முற்றோதல் இடம்பெற்று தேனாவரம் தேவந்துறை கோவில் தெவிநுவர எனும் விஷ்ணு மற்றும் புத்தர் ஆலயத்தையும் தரிசித்து அடியவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தை வந்தடைவர். குறித்த தரிசன யாத்திரை மற்றும் திருவாசகம் முற்றோதலில் இணையவிரும்பும் அடியவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கலந்து கொள்ள விரும்பும் அடியார்கள் சைவத்தமிழ்ப் பண்பாட்டு கலாசார உடையணிந்து வர வேண்டும்.

ஆண்கள் வேட்டி, பெண்கள் சாறி, பஞ்சாபி வயதுக்கேற்ப. மதுபானம், புகைத்தல், மாமிசம் உண்ணல், வெற்றிலை பாவித்தல், நீர் நிலைகள் அருவிகளில் ஒழுங்கமைப்பாளரின் அனுமதியின்றி நீராடுதல் அனைத்தும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை முதலுதவி இந்து சமயத் தொண்டர் சபையின் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 077 923 6552 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-18)

# மட்டக்களப்பில் விழிப்புணர்வுப் பேரணி





(ஏறாவூர்)

மட்டக்களப்பில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக வன்முறையை நிறுத்தல் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் நேற்று மெதடிஸ்த திருச்சபை புகலிடத்தின் ஏற்பாட்டில் இப் பேரணி இடம்பெற்றது.

நாட்டில் இடம்பெறும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்தும் நோக்கிலும், குடும்பத்தில் இடம்பெறும் பிணக்குகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டும் நோக்கிலும் குறித்த விழிப்புணர்வுப் பேரணியும் வீதி நாடகமும் நடைபெற்றது.

இதில் புகலிடத்தின் திட்ட உத்தியோகத்தர் ரஜனி செல்லையா, சுய உதவிக் குழு கொத்தணி உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறுவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஜ)

# அரச நிதி மோசடி விவகாரம்; ராஜிதவிற்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

நெவில் பெர்னாண்டோ தனியார் வைத்தியாலை நிர்வாக பரிபாலனத்திற்கு வருடத்திற்கு சுமார் 3000 மில்லியன் ரூபா செலுத்தி அரச நிதியை முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மோசடி செய்துள்ளார்.

இம்மோசடி தொடர்பில் விரைவான விசாரணைகளை முன்னெடுக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் பிரசார செயலாளர் மொஹமட் முஸம்மில் நேற்று வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிதி மோசடிக் குற்றச்சாட்டு தொடர்பில் நிதி குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யச் சென்ற போது முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. இதன் பின்னரே குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார். (ஜ)

# கதிரைச் சின்னத்தில் போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கதிரைச் 'சின்னத்தில் போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கிடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.


கட்சியின் தலைமையகத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறிஜெயசேகர தெரிவித்துள்ளார்.

17 கட்சிகள் இணைந்து மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய பொதுத்தேர்தலில் கதிரைச் சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணியில் போட்டியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஜ)

# கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பெருவிழா




(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பெருவிழா நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் கலாசார அலுவல்கள்திணைக்களம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளருமான சுந்தரம் அருமை நாயகத்தின் தலைமையில் இடம் பெற்றது. கிளிநொச்சி பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து பாரம் பரிய பண்பாட்டை எடுத்தியம்பும் வகையில் மயிலாட்டம், கோலாட்டம் உள்ளிட்ட பண்பாட்டு கலை அம்சங்களுடன் பேரணி ஆரம் பமாகி மண்டபம் வரை விருந்தினர்கள் அழைத்துச் செல்லபட்டனர். கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து கிளிநொச்சி பண்பாட்டலுவல்கள் பேரவையினால் வழங்கப்படும் அதி உயர் விருதான "கலைக்கிளி" விருது நால்வருக்கு வழங்கி வைக்கப் பட்டது.

தொடர்ந்து இளம் கலைஞர்கள், கலைத்துறை சாதனையாளர்களுக்கு விருதுகளும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப் பட்டனர். அத்துடன் மாவட்ட கலைஞர்களால் உருவாக்கப்பட்ட ஓவியக் கண்காட்சியும் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-100-350)

## புகையிரதம் மோதி யானை பலி



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் பீடியா பண்ணைப்பகுதியில் நேற்றுக் காலை மன்னார் நோக்கி சென்ற புகையிரதத்துடன் மோதுண்டு யானையொன்று பலியாகியுள்ளது.

குறித்த பகுதிக்கு வருகை தந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையினை பார்வையிட்டதுடன் யானை 20 வயதுடையது எனவும் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் செட்டிகுளம் பகுதியில் புகையிரதத்துடன் மோதுண்டு யானை பலியாகும் சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்று வரும் நிலையில் செட்டிகுளம் பெரியகட்டு பகுதியில் அமைக்கப்பட்ட யானைகள் தண்டவாளத்தில் வரும்போது சமிக்ஞை காட்டும் இயந்திரம் செயலிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (9-299)

## வவு.தனியார் கல்வி நிலையங்களுக்கான தடை மேலும் ஒரு வாரத்திற்கு நீடிப்பு

(குருமன்காடு)

டெங்கு நோய் தாக்கம் காரணமாக வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்கள் மறு அறிவித்தல் வரை இயங்குவதற்கு பிராந்திய சுகாதார திணைக்களத்தால் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் விதிக்கப்பட்ட தடை உத்தரவு மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. 650 இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் இத் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் தனியார் கல்லூரி உரிமையாளருக்கான சந்திப்பு நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வவுனியா நகரசபை உப தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வைத்தியர்கள், நகரசபை ஊழியர்கள், தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், தனியார் கல்லூரி ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தனியார் கல் லூரி உரிமையாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் டெங்கின் தாக்கம் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டதுடன் தனியார் கல்வி நிலையங்களை மூடியதன் காரணமும் விபரமாக தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் தனியார் கல்லூரி உரிமையாளர்களும் அவர்கள் எதிர் நோக்கும் அசௌகரியங்களை தெரிவித்தனர். சுமார் இரு மணித் தியாலங்களுக்கு மேலாக இடம் பெற்ற இக் கலந்துரையாடலின் பின்னர் தனியார் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்வி நிலை யங்களை மறு அறிவித்தல் வரை இயங்குவதற்குக் கான தடையுத் தரவினை மேலும் ஒருவாரத் துக்கு நீடிப்பதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. (9-250)

## கிறிஸ்மஸ் கரோல் தமிழ் பாடல்

### தேசிய ரீதியில் வவு.சூசையப்பர் ஆலயம் முதலிடம்



(நெளுக்குளம்)

அகில இலங்கை ரீதியிலான கிறிஸ்மஸ் கரோல் தமிழ் பாடல் போட்டியில் வவுனியா புனித சூசையப்பர் ஆலயத்தின் பாடகர் குழாம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டு கேடயத்தையும் ஐம்பதினாயிரம் ரூபா பணப் பரிசினையும் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

கொழும்பு றாகம புனித பேருது வானவர் மற்றும் பவுலடியார் பேராலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற. அகில இலங்கை ரீதியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழியில் கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டியில் தமிழ்மொழிமூல பாடல் போட்டியில் கலந்துகொண்ட வவுனியா வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயபாடகர் குழாம் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். (9-299)

## விழிப்புணர்வு கருத்தமர்வு



(மன்னார்)

மன்னார் மாவட்ட விழுது மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் "சர்வதேச மனித உரிமைகள்" தினத்தை முன்னிட்டு இளையோர் மற்றும் கிராம மட்டத் தலைவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விழிப்புணர்வுக் கருத்தமர்வு நேற்று மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட விழுது மேம்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ஜெகநாதன் டலிமா தலைமையில் இடம்பெற்ற குறித்த கருத்தமர்வில் பெண்கள் சமாசம் மற்றும் இளையோர் வலையமைப்பைச் சேர்ந்தோர் கலந்து கொண்டனர்.

"சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்களையும் விரிவுரைகளையும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட் தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் மற்றும் நிறுவன அபிவிருத்தி அலோசகர் நிக்ஸன் றோச் ஆகியோர் நிகழ்த்தினர். (9-285)

## கல்மடு குளத்தின் வான் கதவுகள் திறக்காததால்

### கிராமங்களுக்குள் புகுந்த வெள்ளம்-மக்கள் பாதிப்பு

(தருமபுரம்)

நாட்டின் சீரற்ற காலநிலை காரணமாக கடந்த சில நாட்கள் பெய்த தொடர் மழை காரணமாக குளங்கள் நிரம்பியிருந்தன. இந்த நிலையில் கல்மடு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படாததால் பாலம் உடைந்து குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

இதனால் புளியம்பொக்கணை, தருமபுரம் மேற்கு, தருமபுரம் கிழக்கு, கல்வெட்டித் திடல் போன்ற கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

மேலும் குறித்த குளத்தின் கீழ் உள்ள நெத்தலி ஆறு அருகில் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதால் மழை காலத்தில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர். இந்த சீரற்ற கால நிலை தொடர்வதால் மீண்டும் மழை ஆரம்பிக்கும் போது குளம் நிரம்பிய பின்னர் வான் கதவுகள்



திறக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-316)

# முல்லைத்தீவில் கிணறுகளைத் துப்புரவு செய்யும் சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள்



(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரியின் பணிப்பின் பெயரில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகளை சிவில் பாதுகாப்புத் திணைக்கள ஊழியர்கள் துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு வசந்தபுரம் மற்றும் விசுவமடு கிழக்கு, பாரதிபுரம், மாணிக்கபுரம் போன்ற தாழ் நிலப்பகுதிகளில் வெள்ளத்தின் பாதிப்பினால் மக்களின் கிணறுகள் அனைத்தும் வெள்ளம் மூடி பாய்ந்துள்ளது.

இதனால் மக்கள் குடி தண்ணீரினைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளார்கள்.

இவ்வாறு இனம் காணப்பட்ட மக்களின் கிணறுகளை இறைத்து துப்புரவு செய்யும் பணியிலும் கிணறுகளுக்கு குளோரின் போடும் பணியிலும் முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளார்கள். (9-281)

# நிவாரணப் பொருட்கள் வழங்கல்



(குருமன்காடு)

மன்னாரில் மழை வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மன்னார், முருங்கன், நானாட்டான், மடுக்கரை, முள்ளிமோட்டை போன்ற பகுதிகளிலுள்ள 56 குடும்பங்களுக்கு கனடா உறவுகளின் நிதிப்பங்களிப்பில் உலர் உணவுப் பொருட்கள், சிறுவர்களுக்கு பால்மா, பிஸ்கட் பொதிகள் நேற்று முன்தினம் தமிழ் விருட்சம் அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டது. (9-250-299)



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 38 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் மற்றும் நுளம்பு வலைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திர மேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் என்பன இணைந்து விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த இரண்டு நாட்களாக வெள்ள நிவாரணத்திற்காக உலர் உணவு பொதிகள் சேகரிக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். குறித்த கழகங்களை சேர்ந்த சுமார் 40க்கு மேற்பட்ட இளைஞர்கள் இரண்டு நாட்களாக சேகரித்த பொருட்களைக் குடும்பத்துக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியில் நேற்று முன்தினம் வழங்கி வைத்தனர். (9-281)

# வன்னி மாவட்ட பட்டதாரிகளுக்கான விசேட கலந்துரையாடல்

(நெளுக்குளம்)

வன்னி மாவட்டத்திலுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கு மான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் மோகனதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளதாகவும் வன்னி மாவட்ட பட்டதாரிகள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

மேலும் இக் கலந்துரையாடலில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸின் ஆளுமை, அனுபவப்பகிர்வு, வன்னி மாவட்டத்தில் அபிவிருத்தியை முன்னெடுத்தல், இப் பாரிய செயற்பாட்டிற்கு துறை சார்ந்த ரீதியில் அனைத்துப்பட்டதாரிகளும் பங்களிப்பை உறுதி செய்தல், பட்டதாரி உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரிகள் கடந்த பத்து வருடங்களாக நிர்வாக ரீதியில் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், வேலையற்ற அனைத்துப்பட்டதாரிகளுக்கும் உடனயாக நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கத்தினூடாக முன்னெடுத்தல். வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தினை செயற்றிறன் கொண்ட அமைப்பாக உருவாக்கும் பொருட்டு புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் அபிவிருத்திக்கான இணைப்புப் பட்டதாரிகள் சங்கத்தை உருவாக்குதல் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதுடன் இவ் விசேட கலந்துரையாடலுக்கு வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 2007-2019 வரை பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய அனைத்துப்பட்டதாரிகளையும் தவறாமல் சமுகமளிக்குமாறு வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (9-299)

## தமிழ் சமாதான நீதவான்கள் ஒன்றிய அங்குரார்ப்பணம்

(முல்லைத்தீவு)

அகில இலங்கை தமிழ் சமாதான நீதவான்கள் ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு உலக மனித ஒற்றுமை தினமான டிசெம்பர் 20 ஆம் திகதி முல்லைத்தீவு முள்ளியவளையில் உள்ள மு/கலைமகள் வித்தியாலய பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள அகில இலங்கை தமிழ் சமாதான நீதவான்களை எதிர்வரும் 18.12.2019 க்குள் 077 1067 890 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (9-281)




# வவுனியாவில் வாகன விபத்து;இராணுவத்தினர் உட்பட ஐவர் படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் நான்கு இராணுவத்தினர் உட்பட ஐவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புளியங்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற இராணுவ வாகனம் ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் எதிரே வந்த வாகனத்துடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் நான்கு இராணுவத்தினரும், வாகனத்தில் பயணித்த ஒருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (9-299)

# கரைதுறைப்பற்று பிரதேச பண்பாட்டு பெருவிழா







முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் பண்பாட்டு பெருவிழா நேற்று முன்தினம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி மணிவண்ணன் உமாமகள் தலைமையில் தண்ணீருற்று ஐங்கரன் மண்டபத்தில் இடம்பெற்றது. தண்ணீருற்று சந்தியில் இருந்து மாணவர்களின் நடன நிகழ்வுகள் மற்றும் பாரம்பரியத்தை விஸ்தரிக்கும் ஊர்வலத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதேச கலைஞர்கள் பலர் கௌரவிக்கப்பட்டதுடன் கரைதுறைப்பற்று பிரதேசத்தை சித்திரிக்கும் வகையில் "சிலம்போசை" நூல் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனால் வெளியிட்டு வைக்கப்பட்டது. (9)

# வவுனியா வடக்கு பிரதேசசபை வரவு-செலவுத் திட்டம் தோல்வி

(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

வவுனியா வடக்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் இ.தணிகாசலம்தலைமையில்நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதன்போது வரவு- செலவுத் திட்ட விவாதம் இடம்பெற்று வாதப்பிரதி வாதங்கள் கடுமையாக இடம்பெற்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டிற்கான சபையின் வரவு-செலவுத் திட்டத்தில் தவிசாளர் தனது பகுதிக்கே முக்கியத்துவம் வழங்கியதுடன் இம்முறை வரவு-செலவு திட்டத்திலும் மக்களுக்கான வேலைத் திட்டத்திற்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை என பல்வேறு உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. வரவு செலவு திட்டம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. எதிராக தமிழர் விடுதலை கூட்டணி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திர கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, சுயேட்சை குழு ஆகியவற்றைசேர்ந்த 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஆதரவாக தமிழ் கூட்டமைப்பை சேர்ந்த 7 பேர்வாக்களித்ததுடன், தமிழ் கூட்டமைப்பை(ரெலோ) சேர்ந்த சபையின் உப தவிசாளர் யோகராஜா நடுநிலைமை வகித்திருந்தார். இதனடிப்படையில் வரவு- செலவுத் திட்டத்திற்கு எதிராக பெரும்பான்மை வாக்குகளை பெற்று தோல்வியடைந்தது. (9-299)

# பாரதம்

## குடியுரிமைச் சட்டமூலத்திற்கு எதிரான போராட்டங்கள் தீவிரம்

### ரயில், விமானப் போக்குவரத்துக்கள் முடக்கம்





(டில்லி)

மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய குடியுரிமைச் சட்ட வரைபுக்கு எதிராக அசாம், திரிபுரா மாநிலங்களில் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில் இரு மாநிலங்களிலும் பயணிகள் ரயில் சேவைகள் முழுவதுமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் அசாமின் குவாஹாட்டி, திப்ரூகர் நகரங்களில் விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.



பயணிகளின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இரு மாநிலங்களிலும் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுமட்டுமன்றி ரயில்வே பாதுகாப்புக்காக கூடுதலாக துணை இராணுவப்படை வரவழைக்கப் பட்டுள்ளது.

குடியுரிமைத் திருத்த வரைவு மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பின்னர் இது சட்டமாகும். ஆனால் இந்த வரைபுக்கு வடகிழக்கு மாநிலங்களில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பங்களாதேசத்தினரின் ஊடுருவலுக்கு எதிராக அசாம் மக்கள் நீண்ட காலமாகப் போராடி வருகிறார்கள்.

பங்களாதேஷில் இருந்து அகதிகளாக வந்த இந்துக்களுக்கு குடியுரிமை வழங்கினால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என அசாம் உள்ளிட்ட வட கிழக்கு மாநிலங்களில் வாழும் பழங்குடியின மக்கள் எண்ணுகின்றனர். அசாம் மாநிலத்தில் மட்டும் சுமார் 20 இலட்சம் பங்களாதேஷ் இந்து அகதிகள் வசிப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் குடியுரிமைச் சட்ட வரைபைத் தொடர்ந்து அசாம் மற்றும் திரிபுராவில் நேற்றைய போராட்டம் இன்னும் தீவிரமடைந்துள்ளது. பல இடங்களில் ரயர்களை கொளுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் வாகனப் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது.(ஐ-2)


## இராணுவம் மக்களை

## படுகொலை செய்வது இனப்

### ஆங்சான் சூகியிடம் ரோ



(நேபிடோ)
மியன்மார் படையினர் இனப் படுகொலையில் ஈடுபடவில்லை



## உலகின் சக்திவாய்ந்த பெ

## நிதியமைச்சர் நிர்மலா சீதார




(சென்னை)

உலகின் சக்திவாய்ந்த 100 பெண்களைக் கொண்ட பட்டியலில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 34 ஆவது பெண்ணாக தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார்.

உலகின் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலை ஃபோர்பஸ் சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

குறித்த பட்டியலின்படி 40 ஆவது இடத்தில் பிரித்தானிய மகாராணி எலிசபெத்தும், 42 ஆவது இடத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் பின் மகள் இவாங்கா ட்ரம்பும் தெரிவு செய்யப்ப

## பேரறிவாளனின் பரோல் மேலும் ஒரு மாதம் நீடிப்பு



(சென்னை)

பேரறிவாளனுக்கு 30 நாட்கள் பரோல் முடிவடையும் நிலையில் மேலும் ஒரு மாதம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு 28 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் பேரறிவாளனுக்கு 2 ஆவது முறையாக பரோல் வழங்கப்பட்டது.

தந்தைக்கு உடல் நலம் சரியில்லாததாலும் அவரது சகோதரியின் மகள் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவும் அவரது தாய் அற்புதம்மாள் பரோல் வழங்குமாறு தமிழக அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையேற்று பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல் வழங்கப்பட்டது. இதையடுத்து சகோதரியின் மகள் திருமணத்தில் பேரறிவாளன் கலந்துகொண்டார்.

பேரறிவாளனின் பரோல் காலம் நேற்று வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் அவரது தந்தையின் உடல்நலம் மோசமாக இருப்பதால் மேலும் ஒருமாதம் பரோலை நீடிப்பு செய்ய வேண்டும் என தாயார் அற்புதம்மாள் தமிழக அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தமிழக அரசு ஒரு மாதம் பரோல் காலத்தை நீடிப்பு செய்து உத்தரவிட்டுள்ளது.(ஐ-2)

## 44 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான குகை



(ஜகார்த்தா)

44 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் உள்ள ஒரு குகையை அகழ்வாராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர். அப்போது குகையில் இருந்த சுண்ணாம்பு பாறைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதை கண்டனர். ஆடு, மாடு, காட்டுப்பன்றி, மான் மற்றும் குதிரை போன்ற விலங்குகளின் ஓவியங்கள் இருந்தன சில ஓவியங்கள் விலங்குகளை வேட்டையாடுவது போல் வரையப்பட்டிருந்தன.


அதில் வேட்டையாடும் நபர்கள் கைகளில் ஈட்டி மற்றும் கயிறுகளை வைத்திருப்பது தத்ரூபமாக வரையப்பட்டுள்ளது. மேலும் அந்த ஓவியங்களி

# வெளிநாடு

## ளை சுற்றிவளைத்து

## னப்படுகொலையில்லையா?

### ரோஹிஞ்யர்கள் கேள்வி



என ஆங்சான் சூகி தெரிவித்துள்ளமை குறித்து கடும் கண்டனம் வெளியிட்டுள்ள ரோஹிஞ்யா இனத்தவர்கள் அவர் தெரிவித்தது உண்மையா என்பதை சர்வதேசம் உரிய ஆதாரங்களுடன் மதிப்பிடும் எனச் சுட்டிக்காட்டினர்.

திருடன் ஒருவன் தான் திருடன் என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் ஆதாரங்கள் மூலம் நீதியை வழங்கலாம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆங்சான் சூகி பொய்சொன்னாலும் அவர் தப்ப முடியாது. அவர் நிச்சயம் நீதியை எதிர்கொள்வார். உலகம் அவரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

இராணுவம் மக்களை சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு கொலை செய்த பின்னர் அவர்களின் உடலுக்கு தீ மூட்டுவது இனப்படுகொலை இல்லையா எனவும் அவர்கள் கேள்வியெழுப்பினர்.

ரோஹிஞ்யா மக்களிற்கு எதிராக அளவுக்கதிகமான படைபலம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். எனினும் மியன்மாரின் மேற்கு ரக்கைன் மாநிலத்தில் இடம் பெறும் மோதல் குழப்பமானது. இலகுவில் புரிந்துகொள்ள முடியாதது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-2)

## 5 பெண்ணாக

## தாராமன் தேர்வு

ன்களைக்
நிர்மலா
ர்ந்தெடுக்

ட்டியலை
து.
இடத்தில்
42 ஆவது
ால்ட் ட்ரம்
செய்யப்பட்

டுள்ளனர்.

இந்தியாவின் நிதியமைச்சராக பதவிவகித்து வரும் நிர்மலா சீதாராமன் பல சர்ச்சைகளையும் சந்தித்து வருகிறார்.

குறிப்பாக இந்தியாவின் பொருளாதாரம் நலிவுற்று இருக்கும் நிலையில், சில அரசியல் செயற்பாடுகளை தன்னம்பிக்கையுடன் முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## உக்ரேய்ன் கல்லூரியில் தீ விபத்து 16 பேர் உடல் கருகி உயிரிழப்பு!

(கீவ்)

உக்ரேய்ன் கல்லூரி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 பேர் உடல் கருகிப் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து ஏ.என்.ஐ. வெளியிட்ட செய்தியில், "உக்ரேய்னில் உள்ள ஒடிசா நகரத்தில் அமைந்துள்ள கல்லூரி ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை ஏற்பட்ட தீ விபத்திலேயே 16 பேர் பலியாகினர்.

பலர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கல்லூரிக் கட்டடத்திலிந்து பலர் கீழே விழுந்ததால் அவர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது.. மேலும் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது"

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு உக்ரேய்ன் ஜனாதிபதி வொலோதிமீர் ஸெலன்ஸ்கி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (ஜ-2)

### ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஆயுதக்கடத்தலுக்கு உதவி

## ஈரானின் விமான நிறுவனம் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை

(வோஷிங்டன்)




உள்நாட்டுப் போர் நடைபெறும் ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதக் கடத்தலுக்கு உதவியதற்காக ஈரானின் மிகப் பெரிய விமான நிறுவனம் மீது அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடை விதித்தது.

அந்த வகையில் ஈரானின் மிகப்பெரிய விமான நிறுவனமான மகான் எயார் நிறுவனம் மீதும் ஈரானின் கப்பல் நிறுவனம் மீதும் அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடை விதிக்கிறது என அமெரிக்க திறைசேரி அறிக்கை மூலம் தெரிவித்தது. அத்தோடு இதனை அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோவும் உறுதிப்படுத்தினார்.

அமெரிக்கா உள்ளிட்ட ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா, சீனா ஆகிய 6 வளர்ந்த நாடுகளுக்கும்ஈரானுக்கும்இடையே கடந்த 2015 இல் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி ஆக்கபூர்வத் தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் அந்நாடு எவ்வளவு யுரேனியம் இருப்பு வைத்துக் கொள்ளலாம், எந்த அளவுக்கு அதைச் செறிவூட்டலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டது.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளதாகக் கூறி அதிலிருந்து விலகினார். மேலும் ஈரான் மீது மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறார்.

இதற்குப் பதிலடியாக ஈரான் அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறி வருகின்றமை காரணமாக அமெரிக்கா - ஈரான் இடையே மோதல் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கை ஓவியங்கள் கண்டுபிடிப்பு



இருந்தன.
யாடுவது

மககளில்
ச்சுருபமாக
பங்களில்


மனிதர்களின் உருவம் சிறியதாகவும் விலங்குகளின் உருவம் பெரியதாகவும் இருக்கின்றன.

இதன் மூலம் அந்த காலத்தில் வாழ்ந்த உயிரினங்கள் இராட்சத அளவில் வளர்ந்திருக்கும் என்று நம்பப்படுகிறது.

கண்டுபிடிக்கப்பட்ட குகை ஓவியங்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் அவை 44 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையவை என்பது தெரியவந்துள்ளது. (ஜ-2)

## உலகிற்கு வெறுமையான வாக்குறுதிகள் தேவையில்லை சமாதானம் செய்வோரின் சாட்சியம் தான் தேவை

### போப் பிரான்சிஸ் சுட்டிக்காட்டு



(இத்தாலி)

உலகிற்கு வெறுமையான வார்த்தைகளும், வாக்குறுதிகளும் தேவையில்லை. மாறாக, சமாதானம் செய்வோரின் சாட்சியம் தேவை என போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

"அமைதி, நம்பிக்கையின் ஒரு பயணமாக..." என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸினால் வெளியிடப்பட்ட உலக அமைதி நாளுக்குரிய செய்தியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அச்செய்தியில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

அமைதிக்காக நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை, எத்தனை தடைகளையும் பிரச்சினைகளையும் சந்தித்தாலும் முன்னோக்கிச் செல்ல நம்மை உந்தித் தள்ளுகிறது.

சமுதாயத்தில் உள்ள பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்ள இயலாமை என்ற குறைபாடே, நம்முள், மோதல்களையும், போர்களையும் உருவாக்குகின்றன.

மனித சமுதாயம், தன் நினைவிலும் உடலிலும் போர்களின் காயங்களையும் வடுக்களையும் தாங்கி வாழ்கிறது. மனிதர்கள் நடுவே, நிலையற்ற தன்மையும், அச்சமும் உருவாகும் வேளை, அவற்றிற்குத் தீர்வாக, மக்களிடையே உறவையும், உரையாடலையும் வளர்ப்பதற்குப் பதில், பகைமை உணர்வுகள் என்ற நஞ்சை இவ்வுலகம் விதைக்கிறது என்பதை, எனது ஜப்பான் நாட்டு திருத்தூதுப் பயணத்தில் இன்னும் ஆழமாக நான் உணர்ந்தேன்.

1945 ஆம் ஆண்டு வரலாற்றில் என்ன நடந்தது என்பதை மனிதகுலத்தின் மனச்சாட்சிக்கு, தொடர்ந்து நினைவுறுத்தும் வண்ணம், அணுகுண்டு தாக்குதலிலிருந்து தப்பித்து ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் வாழ்ந்து வருவோர், நமது நினைவுகளை தொடர்ந்து சுத்தம் செய்து வருகின்றனர்.

வரலாற்று நினைவுகளே, நம்பிக்கை என்ற தொடுவானத்தில் தோன்றும் ஒளிக்கீற்றுகள். இவ்வுலகிற்கு இன்று வெறுமையான வார்த்தைகளும் வாக்குறுதிகளும் தேவையில்லை, மாறாக, சமாதானம் செய்வோரின் சாட்சியம் தேவை என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# இந்தியாவிலுள்ள ஈழ அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வேண்டும்

## மனோ கணேசன் கோரிக்கை

(கொழும்பு)

**இந்தியாவில் வசிக்கும் ஈழ அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்தார்.**

இந்தியாவில் வசிக்கும் ஈழ அகதிகள் தொடர்பில் அந்நாட்டு அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில் இது தொடர்பில் மனோ கணேசன் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

அதில் "இலங்கையில் தமிழர்களின் போராட்டங்கள் தோற்றுப் போனமை அல்லது எதிர்பார்த்த இலக்கை அடையாமை ஆகியவற்றுக்கு பல காரணங்கள் இருந்தாலும் தமிழர்களின் சனத்தொகை தான் அதற்கான முதற் காரணம்.

இலங்கையில் தமிழர் சனத்தொகை குறையக் குறைய அவர்களின் அரசியல் பலம் குறைகிறது. அரசியல் பலம் குறையக் குறைய அவர்களின் போராட்டங்கள் தோல்வியடைகின்றன.

தமிழரின் சனத்தொகை குறைவுக்கு இனமாற்றம், வெளியேற்றம் ஆகியவையே பெரும் காரணங்களாக அமைந்து விட்டன. இவற்றில் நாட்டை விட்டு வெளியேறிய தமிழர்களில் மீண்டும் இலங்கைக்குத் திரும்பி வரக் கூடிய நிலையில் இருப்பது இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகள் தான்.



எனவே தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளுக்கு இலங்கை-இந்திய இரட்டைக் குடியுரிமை கொடுங்கள் என்றுதான் நான் இந்திய அரசை நோக்கி கோரிக்கை விடுக்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு மாநகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

## ஆதரவாக 78, எதிராக 13 பேர் வாக்களிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 65 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கொழும்பு மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 78 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய கொழும்பு மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 65 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (இ-7)

# பிள்ளையான் விரைவில் விடுதலை!

(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் விரைவில் விடுதலையாவார் என்று தெரிய வருகிறது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் பிள்ளையான் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார்.

இந்நிலையில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சென்று பிள்ளையானை சந்தித்து நலன் விசாரித்த நிலையிலேயே அவர் விரைவில் விடுதலையாவார் என்ற தகவல் வெளியானது. (இ-7)

# "தேசசக்தி" விருது வழங்கல்



(கொழும்பு)

கொழும்பு கொப்பேகடுவ விவசாய ஆராட்சி நிலைய மண்டபத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச சமாதான மாநாட்டில் இலங்கையில் சமாதானம், சமூகப் பாதுகாப்பு, சமூக விழிப்புணர்வு மற்றும் மனித உரிமைக்காக குரல் கொடுத்தமைக்காக கிராம உத்தியோகத்தர் க.அனுஜனுக்கு தேசசக்தி சமாதானத்திற்கான தேசிய விருது, இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் றொபினா பி. மார்க்ஸால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சமூகம்சார்ந்த சமாதான செயற்பாட்டாளர்களுக்கு கீர்த்தி ஸ்ரீ, தேசசக்தி, நெல்சன் மண்டேலா சர்வதேச விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தாயன்பு

ஒரு வயதான அம்மா தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தார். அவர் கையிலே என்னத்தையோ வைத்துக் கொண்டு அதை அடிக்கடி பார்த்துக் கொண்டு இருந்தார். ஒருவன் மெதுவாக அவரிடம் சென்று கையிலே இருக்கிறது என்ன என்று எட்டிப் பார்த்தான். பார்த்தால் அவர் கையிலே நான்கு பல்லுகள் இருந்தன.

இவன் ஆச்சரியமாக அந்த அம்மாவைப் பார்த்தான். ஏன் அம்மா உனக்கு என்ன பைத்தியமா? ஏது இந்தப் பல்லு. இதை என்னத்துக்காகக் கையிலே வைத்து அலைந்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டான். அதுக்கு அந்த அம்மா விபரம் சொல்ல ஆரம்பித்தார்.

இதோ பாரப்பா எனக்கு ஒரு மகன் இருந்தான். அவனை ரொம்பச் செல்லமாக வளர்த்தேன். அவனைத் தரையிலே நடக்க விடுவதில்லை. எப்பவும் தூக்கி வைத்துக் கொண்டிருப்பேன். அவன் நல்லா பெரியவனாகி பள்ளிக்கூடம் செல்கிறபோது கூட அவன் புத்தக மூட்டையை நான்தான் சுமந்து கொண்டு போவேன். பார்க்கிறவர்கள் கூடக் கேலி செய்வார்கள். ஏனம்மா படிக்கப் போவது நீயா? உன் பிள்ளையா? என்று கேட்பார்கள்.

அவன் இன்றைக்கு எவ்வளவோ பெரிய மனிதனாகிவிட்டான். வெளிநாட்டிலே உத்தியோகத்திலே இருக்கிறான்.

அண்மையிலே இங்கே வந்துவிட்டுப் போனான். ஒரு நாள் என்னை ஒரு கோபத்திலே அறைந்து விட்டான். அப்பொழுது இந்த நான்கு பற்களும் விழுந்து விட்டன. இன்னும் கூட விழுந்திருக்கும் ஆனால் பல்லுதான் இல்லை.

என் பிள்ளை அறைந்ததனாலே விழுந்த பல்லு இல்லையா இது. அதனாலே இதை எப்பவும் கையிலே வைத்துக் கொண்டு ஆசையோட பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் தான் வெளிநாட்டுக்குச் சென்று விட்டான். அவனைப் பார்க்க முடியாத ஏக்கத்தை நான் இந்தப் பல்லைப் பார்த்துப் போக்கிக் கொள்கிறேன். என்றாராம் அந்த அம்மா.

இந்தக் கதை எதுக்காக என்றால் தாயன்பு எப்படிப்பட்டது என்பதைப் புரிந்து கொள்வதற்காக கல்யாணம் ஆனதுக்கு பின்பும் தாயை மறந்து விடுகிற எத்தனை பேரு இந்த உலகத்திலே! அவர்கள் காதிலே விழவேண்டும் என்பதற்காக இந்தத் தகவல். ஆனால் ஒரு விடயத்தை மட்டும் நல்லா புரிந்து கொள்ள வேண்டும்.

தாயை மதிக்கத் தெரிந்தவர்கள் தான் இன்றைக்கு வாழ்க்கையிலும் எல்லா விதத்திலேயும் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். வேண்டும் என்றால் விசாரித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்னொரு அம்மா இருந்தார். அவர் தினமும் கோயிலுக்கு வருவார். சாமியைப் பார்த்து கடவுளே நான் இறந்து போனால் நரகத்துக்குப் போக வேண்டும் என்று வேண்டிக் கொள்வாராம். எல்லோரும் சொர்க்கத்துக்குப் போக வேண்டும் என்று தானே வேண்டிக் கொள்வார்கள். ஆனால் இந்த அம்மா இப்படி வேண்டிக் கொள்கிறார்களே என்று அங்கே இருந்த அர்ச்சகருக்குச் சந்தேகம்.

ஒரு நாள் அதை நேரடியாகவே அவரிடம் கேட்டுக் கொண்டார். அதுக்கு அந்த அம்மா பதில் சொன்னார்... ஐயா எனக்குக் கல்யாணமாகி ரொம்ப நாள் வரைக்கும் குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருந்தது. கோயில் குளம் எல்லாம் சுற்ற வந்தேன். ரொம்ப நாள் கழித்து ஒரு குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. அவனை ரொம்பச் செல்லம் கொடுத்து வளர்த்தேன். அதனுடைய விளைவு என்னாகிவிட்டது என்றால் அவன் ரொம்ப மோசமாகி விட்டான்.

கெட்ட பழக்கங்கள் எல்லாம் கற்றுக் கொண்டான். அவன் இறந்து போனால் நிச்சயம் அவனுக்கு நரகம் தான் கிடைக்கும். அந்த அளவுக்குக் கெட்டவன் என்று பேர் வாங்கிவிட்டான். எனக்குத் தெரியும்... இவ்னுக்கு நரகத்திலே கூட யாரும் தயவு காட்ட மாட்டார்கள்.

அதனாலே இவனுக்கு முந்தி நான் இறந்து நரகத்துக்குச் சென்று விட்டால் இவனுக்கு பணிவிடை செய்ய வேண்டுமல்லவா? அதனாலே தான் நரகத்துக்கு போக வேண்டும் என்று நான் தினமும் ஆண்டவனை வேண்டிக்கொண்டிருக்கிறேன் என்று கண் கலங்கிக்கொண்டே அந்த அம்மா சொன்னாராம். அதுதான் தாய் உள்ளம்.

தாயின் பெருமையைச் சரியாக உணர்ந்தவர்களுக்கு எப்பவும் எந்தக் கஷ்டமும் வராது. இது ஏதோ உபதேசத்துக்காக சொல்லுகிற வார்த்தை இல்லை. உண்மையான வார்த்தை. இந்த விபரத்தை எல்லாம் நண்பர் ஒருவரிடம் சொன்னேன். அவர் கொஞ்சநாள் கழித்து என்னைத் தேடி வந்தார். அவர் கையிலே நான்கு பற்கள் வைத்திருந்தார்.

என்னாச்சு ஏதுங்க இந்தப் பற்கள் என்று விசாரித்தேன்.

உங்க உபதேசத்தை கேட்டுக் கொண்டு இந்த உலகத்திலே எல்லோரையும் தாயாக நினைக்க ஆரம்பித்தேன். ஒரு அம்மாவைக் கடைத்தெருவிலே பார்த்து தாயே என்று கூப்பிட்டேன். அவர் உடனே பளார் என்று என்னை அறைந்துவிட்டார். பல்லு விழுந்து விட்டது. அதைத்தான் பொறுக்கிக் கொண்டு உங்களைத் தேடி வந்தேன் என்றார்.

தாயே என்று தானே கூப்பிட்டீர்கள்? அதுக்கு ஏன் அறைந்தார் என்று கேட்டேன். நான் தாயே என்று கூப்பிட்டது அவர் காதிலே நாயே என்று விழுந்துவிட்டதாம். அதுதான் இப்படி ஆகிவிட்டது என்றார்.

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—194

# அவரைகளின் உலகப் பொருளாதாரம்!

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பஞ்சம், பசி, பட்டினியை முற்றுமுழுதாக இல்லாதொழிப்பதற்கான திட்டங்கள் பல தீட்டப்பட்டு 2030 ஆம் ஆண்டுக்குள் இதனை முழுமையாக நிறைவேற்றி விட வேண்டும் என்பதற்கான முனைப்புக்கள் பல வழிகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன. இயற்கை நமக்கு தந்த அரும் பெரும் சொத்துக்களில் அவரைத் தாவரங்களும் ஒன்றாகும். வெறுமனே தாவரங்களென்றல்லாது அவை வளிமண்டலத்திலுள்ள தழைச்சத்தை (நைதரசனை) நிலத்தில் நிலை நாட்டும் பேறு உள்ளனவாக கிடைத்திருக்கின்றன. இது இயற்கையின் வரம் அல்லவா. தாவரமே தானாகவே வளியிலுள்ள தாவரங்களுக்கு அவசியம் தேவையான தழைச் சத்தை தனக்கிருக்கும் வேருக்கும் நுண்ணங்கிகளுக்குமிடையிலான ஒன்றியவாழ்வு என்னும் பொறிமுறைக்கூடாக இலகுவில் மண்ணில் சேமித்து வைக்கும். இதுவொரு சூழலுக்கிணைவான தொழில்நுட்பமாக இயற்கையே எமக்களித்திருக்கின்றது. அதிகளவில் அவரைப் பயிர்களை பயிர்செய்தால் மண்ணில் தழைச்சத்தின் அளவைப் பேணலாம் என ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன. இதனை நம்மவர்கள் ஆய்வுக் கெடுத்து இந்த தழைச்சத்தை நிலை நாட்டும் பொறிமுறையில் முக்கியமாக இருக்கும் நிகப் (nif – Nitrogen fixing) பரம்பரையலகை அவரையல்லாத தாவரங்களுக்குள் செலுத்தி அவரையல்லாத பயிர்களும் தழைச்சத்தை நிலை நாட்டும்வரத்தை கொடுத்திருக்கின்றார்கள். பரம்பரையலகு தொழில் நுட்பத்தினால் இது சாத்தியமாயிருப்பினும் சூழலியலாளர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றார்கள். ஏனெனில் இயற்கையை மாற்றவிருக்கும் இவ்வகை தொழில்நுட்பங்கள் பின்னர் பாரியவேறு விளைவுகளைத் தோற்றுவித்துவிடலாம் என்ற ஏக்கம் தான்.

இயற்கை நமக்கு தந்திருக்கும் பலவகையான அவரைப் பயிர்கள் அதிகளவில் பயன்பாடற்றவையாகவே உள்ளன. அவற்றினை வரிசைப்படுத்தினால் அனைவருமே ஆச்சரியப்படுவோம். இவ்வளவு இருக்கின்றனவா என எண்ணத்தோன்றுகின்றதல்லவா! வாருங்கள் பார்ப்போம். பயறு, உழுந்து, கௌபீ, நிலக்கடலை, பயற்றை, பீன்ஸ், அவரை, சிறகவரை, கொண்டல் கடலை, கடலை, சோயா, சிவப்புக்கடலை, கொள்ளு, அகத்தி, இன்னும் பலபல. இவ்வளவு அவரைத் தாவரங்களையும் நாம் பயன்பாட்டில் கொள்ளவில்லை என்பதே இங்கிருக்கும் முக்கியமான செய்தியாகும். அதிக புரதத்தைக் கொண்டுள்ள இவ்வகை தாவரங்களை தினமும் நாம் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் எமக்குத் தேவையான புரதத்தினை நாம் பெற்றுக் கொள்ளமுடியும். மாறாக பயிர்ச் செய்கையில் அவரைப் பயிர்களையும் சேர்த்து நடுகை செய்வதன் மூலம் அவற்றினால் நிலை நாட்டப்படும் தழைச்சத்தினை நாம் பெற்று மண்ணை வளமாக்குவதுடன் ஏனைய பயிர்களுக்கான தழைச்சத்து தேவையையும் நாம் பூர்த்தி செய்து கொள்ள முடியும். தமது தன்னியக்க பொறிமுறை மூலம் தழைச்சத்தை நிலை நாட்டும் இவ்வகையான பயிர்களை நாம் அவசியம் எமது பயிர்ச் செய்கையிலும் உணவிலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவற்றிற்கு மேலாக சணல், கிளிறிசிடியா போன்றவை மண்ணுக்கும் கால்நடைகளுக்கும் உணவாவதுடன் கைத்தொழில் நடவடிக்கை களுக்கும் பயன்படுவனவாக இருக்கின்றன. குறிப்பாக சணல் பசுந்தாள் பசளையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் தண்டுநார் இதிலிருந்து பெறப்படுகின்றது. இலகுவில் உக்கக்கூடியனவாக இவை இருப்பதுடன் சூழலை எந்தவிதத்திலும் மாசுபடுத்தாமலும் இருக்கின்றன.

வீட்டுத்தோட்டத்திலும் அதிகமான அவரைத் தாவரங்களை நாம் தெரிந்தெடுத்து நடுகை செய்து பலன் பெறலாம். குறைந்தளவில் நடுகை செய்து அதிக பலன்களையும் இயற்கை வனப்பையும் தரும் இவ்வகைத்தாவரங்கள் நிச்சயமாக எமது இல்லங்களில் இருக்கின்ற இடங்களில் நடுகை செய்து பயன் பெறலாம். வளம் நிறைந்த பெறுமதி அதிகமாயிருப்பினும் பயன்பாடதிகமற்ற இவ்வகை அவரைத்தாவரங்களை நாம்நடுகைசெய்து பயன்படுத்தி பலன்கள்பல பெறுவோம்.

### அவரைகளின் மகத்துவம்

அவரைப் பயிர்களின் மூலம் ஒருவருக்கு தேவையான புரதச்சத்தைவழங்க முடியும். புரதச்சத்து குறைவான உணவினை உண்பதனால், உடலுக்கு தேவையான சக்தியைப் பெறுவது சிரமமாக இருப்பதனாலும் இலகுவில் மலிவாக கிடைக்கும் புரதத்தினை உணவில் சேர்த்துக் கொண்டால் அதன்மூலம் உணவினை சமனான உணவாக உட்கொள்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும். இவற்றுடன் அவரைப் பயிர்களை பயிரிடுவதனால் மண்ணுக்கு தேவையானதழைச்சத்தினை இலகுவாக நிலை நாட்டவும் முடியும். இந்த இயற்கையின் தொழில்நுட்பத்தை நாம் சரியாகப் புரிந்து கொண்டால் வீட்டுத்தோட்டத் தில் இதனைப் பரீட்சித்தும் பார்க்கலாம்.

செயற்கையான இரசாயனப் பதார்த்தங்களை பசளைகளாக பயன்படுத்தி மண்ணினை மாசுற வைக்காமல் இயற்கையாக கிடைக்கின்ற அவரைப் பயிர்களை இனங்கண்டு அவற்றை பயிரிடுவதன் மூலம் தழைச்சத்தை இலகுவில் மண்ணுக்கு கிடைக்கச் செய்யலாம். இவற்றுடன் பல்வேறு வகையான பசுந்தாள் பசளைகள் மற்றும் பசுந்தாள் இலைப் பசளைகளையும் மண்ணில் சேர்ப்பதன் மூலம் எமக்குத் தேவையான பசளைகளை இயற்கையாக பெற்றுக் கொள்ளலாம். இனி வருங்காலம் மனிதனது சுகாதாரத்தையும் ஆழ்ந்து கவனித்து பயிர்செய்ய வேண்டியிருப்பதனால் இயற்கைப் பசளைகளை பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டியது அனைவரதும் கடமையாகும்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### அவரைகளின் தாக்கம்

எமது பிரதேசத்தில் பல வகையானஅவரைத் தாவரங்கள் காணப்படுகின்றன. அவை களைகளாக இருப்பினும் அவற்றை பூக்கும் போது வெட்டி மண்ணினுள் தாழ்த்து விட்டால் அவை உக்கி ஏனைய தாவரங்களுக்கு தேவையான பசளையைக் கொடுப்பனவாக மாறிவிடும். நாம் அதிகம் பயன்படுத்தாத இவ்வகை அவரைத் தாவரங்களை இவ்வாறு இயற்கை பசளைகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தலாம். களைகளாக இனங் காணப்பட்ட அவரைத் தாவரங்களை அவற்றின் காய்கள் உருவாவதற்கு முன்பு மண்ணினுள் புதைத்தால் அவை சிறப்பான பசளையைத் தரும் தாவரங்களாக மாறி விடுகின்றன. அனைத்திற்கும் எமது வினைத்திறனான முகாமைத்துவத்தில் தான் அனைத்தும் தங்கியிருக்கின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 207




### அவரைகளை உணவில் ஒன்றாக்குங்கள்

எமது பிரதேசத்தில் காணப்படும் அவரைப் பயிர்களை தினமும் ஒன்றையாவது உணவாக உட்கொள்வதனை நாம் கருத்தில் கொள்ளலாம். ஊட்டச்சத்து குறைவான பகுதிகளில் அவரைப் பயிர்களை உணவில் சேர்த்துக் கொள்வது அவர்களுக்கு தேவையான சக்தியைக் கொடுப்பதில் எமக்கு உதவியாக இருக்கும். குழந்தைகளுக்கு மருத்துவரின் சிப்பாரிசின்படி அவரைப் பயிர்களை உணவாக பயன்படுத்தலாம். அவரைப் பயிர்களை அளவாக உட்கொள்வதன் மூலம் அனைவருக்கும்சமனான உணவைப்பெற வழி வகையுண்டு. அவரைப் பயிர்களை உணவாக பல விதங்களில் தயார் செய்து கொள்ளலாம். அனைத்திற்கும் மேலாக சத்துமா ஆகவும் இவற்றினைப் பயன்படுத்தலாம். கடைகளில் கலர்கலராக பலவகைத் தின்பண்டங்கள் இருந்தபோது சத்துமாவிலுள்ள ஊட்டச்சத்து எதிலும்வராது. எனவேதான் அவரைத் தானியங்களை அரைத்தெடுத்த மாவிற்கு தேவையானளவு சீனி சேர்த்து ஊட்டச்சத்து மாவாக பயன்படுத்தலாம்.

### சுகதேகிகளை உருவாக்குங்கள்

சமனான ஊட்டச்சத்தான உணவினை ஒவ்வொருவருக்கும் கிடைக்கத்தக்கதாக செய்தால்அனைவரும்சுகதேகிகளாக இருப்பதற்கான சாத்தியக்கூறு அதிகமே. சுகதேகிகளான எமது எதிர்கால சமுதாயத்தை கட்டியெழுப்பும் பொறுப்பினை அனைவரும் ஏற்றுக்கொண்டு அதற்கான வழிவகைகளை நடைமுறைப்படுத்தி வளமான சுகதேகிகளான சமூகத்தை உருவாக்குவோம்.

# மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்தல்; ஜனாதிபதி கோட்டாபய விசேட கவனம்



(கொழும்பு)

**நாட்டில் மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் அதற்கான அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் வெளிநாடுகளைத் தெளிவுபடுத்தி புதிய செயற்றிட்டங்களுக்கான முதலீடுகளை பெற்றுக் கொள்வதற்கு உரிய பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றுதல் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் மின்சக்தி, சக்திவலு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கை மின்சார சபை, இலங்கை பேண்தகு சக்திவலு அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதுடன், அந்நிறுவனங்களில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான துரித தீர்வுகள் தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மின் உற்பத்தித் துறையில் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்பார்க்கும் புதிய செயற்றிட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய அறிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

மேலும் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின் உற்பத்தி துறைசார்ந்த முன்மொழிவுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. குறித்த முன்மொழிவுகளுக்கு மின்சக்தி அமைச்சின் அதிகாரிகள் பூரண இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களில் மின் உற்பத்தித்துறை தொடர்பாக வெளிநாடுகளுடன் பல புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும் அவற்றுள் பெரும்பாலானவை அரசாங்கங்களுக்கிடையிலான ஒப்பந்தமாக அமையாது தனியார் நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவே காணப்படுகின்றன.

இதனால் அச்செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய கற்கைகளை மேற்கொண்டு நாட்டிற்கு நன்மை பயக்கும் வகையில் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டினார். (ஐ)

---

## சாவகச்சேரி நகர சபையின் பட்ஜெட்டிற்கு உறுப்பினர்கள் எதிர்ப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி. மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர். சாவகச்சேரி நகர சபையின் வரவு- செலவுத் திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கும் கூட்டம் நேற்று முன்தினம் சாவகச்சேரி நகர சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 14 நாட்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட வரைபுக்கு உறுப்பினர்கள் எவரும் எதிர்ப்பு தெரிவிக்காத போதிலும் மக்கள் பார்வைக்கு விடப்பட்டு மீண்டும் சபையின் அங்கீகாரத்திற்கு கொண்டு வந்த போது முன்பு ஆதரவளித்த அதே வரவு-செலவுத் திட்டத்தை பத்து உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுயேட்சை உறுப்பினர்கள் உள்ளடங்கலாக ஆறு பேர் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்தனர். பெரும்பான்மை உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்த போதிலும் தவிசாளரால் தற்துணிவு அடிப்படையில் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சபையில் நிறைவேற்றப்பட்டது. இதே நிலை அடுத்த வருடமும் தொடர்ந்தால் சபையில் ஆட்சி மாற்றம் ஏற்படக்கூடும் எனவும் ஒருசில உறுப்பினர்கள் தெரிவித்தனர். (இ-30)

---

## ஹெரோயினுடன் மூவர் கைது

(இரத்மலானை)

ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று பேரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு குறித்த நபர்களை இரத்மலானை , கொலன்னாவ, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் வைத்து கைது செய்துள்ளனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களிடம் இருந்து 4360 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அத்தோடு கைது செய்யப்பட்ட நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## வரி நிவாரணம் மக்களுக்கு சென்றடைந்ததா? ஆராயுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை

(கொழும்பு)

அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள வரி நிவாரணம் பொது மக்களுக்கு உண்மையிலேயே சென்றடைந்துள்ளதா? என்பதைக் கண்டறியுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பீனர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் தொழில் வாய்ப்பிற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற முதலாவது அமைச்சரவை கூட்டத்தினைத் தொடர்ந்து விசேட வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## எமது ஆதரவு கிடைக்காவிட்டால் கோட்டா வெற்றி பெற்றிருக்கமாட்டார்

(கொழும்பு)

தேர்தல் வெற்றிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாரிய சக்தியாக இருந்ததாகத் தெரிவித்துள்ள நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச் சர் நிமால் சிறிபால டி சில்வா எமது ஆதரவு கிடைக்காவிட்டால் கோட்டாபய ராஜ பக்ஷ இலகுவாக வெற்றி பெற்றிருக்க மாட்டார் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஊவா பரணகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

---

## வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட யானையின் உடல் கண்டெடுப்பு

(கோறளைப்பற்று)

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாசிவன் தீவு ஆற்றில் யானை ஒன்றின் உருக்குலைந்த உடலை பிரதேச வாசிகள். கண்டெடுத்துள்ளனர்.

வெள்ளம் காரணமாகக் குறித்த யானை வெள்ள நீரில் அகப்பட்டு உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 நாட்களாகக் குறித்த ஆற்றில் மிதந்த யானையின் உடற்பாகத்தினை அடையாளம் காணமுடியாமல் பிரதேச வாசிகள் சந்தேகம் கொண்டு கிராம உத்தியோகத்தருக்குத் தகவல் வழங்கியுள்ள நிலையிலேயே யானையின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக யானையின் உடலினை ஆற்றிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

---

## பிரிட்டனில் பொதுத்தேர்தல் கொன்சர்வேடிவ்கட்சி வெற்றி

(பிரிட்டன்)

பிரிட்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் அடிப்படையில் 344 இடங்களில் கொன்சர்வேடிவ் கட்சியும் 201 இடங்களில் தொழிலாளர் கட்சியும் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1987 ஆம் ஆண்டிற்கு பிறகு கொன்சர்வேடிவ் கட்சி பெற்றுள்ள மிகப்பெரிய வெற்றியாக இது பார்க்கப்படுகிறது. அதே போல் 1935 ஆம் ஆண்டிற்கு பிறகு தொழிலாளர் கட்சி பெறும் மோசமான தோல்வியாக இது அமையும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கையில் இரண்டாவது

# டெங்கு அபாயகரமான மாவட்டமாக யாழ்.

## அங்கஜன் எம்.பி.தெரிவிப்பு



## 6841 பேர் பாதிப்பு

### வருட இறுதியில் 5 மடங்கு அதிகரிப்பு

## 3பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இரண்டாவது டெங்கு அபாயகரமான மாவட்டமாக யாழ். மாவட்டம் விளங்குவதுடன் ஐந்து பிரதேச செயலகங்கள் டெங்கு அபாயகரமான பிரதேச செயலகங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் 10 மாவட்டங்களில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்த நிலையில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு மாவட்டம் முதலிடத்தையும் யாழ்.மாவட்டம் இரண்டாம் இடத்திலும் உள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நவம்பர் மாதகாலப் பகுதியில் ஆயிரத்து 549 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இம்மாதம் கடந்த 10 நாட்களில் சுமார் 700 பேர் வரை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் யாழ். மாநகர சபைப் பகுதி, நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய பகுதிகளில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் (2019) முடிவுறாத நிலையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 5 மடங்காக அதிகரித்துக் காணப்படுவதுடன் இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே குறித்த டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு திணைக்களங்கள் பிரதேச சபைகள், சிவில் அமைப்புக்கள், முப்படையினர் இணைந்து பணியாற்றும் செயற்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இதனைக் கண்காணிப்பதற்கு தான் தயாராக உள்ளதோடு தேவைகள் குறித்து தம்மோடு கலந்துரையாடுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## காணாமல் போன கோழிகள் மீட்பு

(பூண்டுலோயா)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெரோ தோட்டத்தில் கடந்த மாதம் 40 கோழிகள் திருடப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் கோழி வளர்ப்பாளர்கள் பூண்டுலோயா பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

இதையடுத்து பல நாள் தேடுதல் வேட்டைக்கு பின்னர் 40 கோழிகளையும் கோழிக் குஞ்சுகளையும் பொலிஸார் கந்தப்பளைப் பகுதியில் மீட்டனர்.

இந் நிலையில் திருடப்பட்ட கோழிகள் எவருக்கும் சந்தேகம் ஏற்படாத வண்ணம் காரில் கடந்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

மேலும் இக் கடத்தலோடு தொடர்புடைய 3 சந்தேக நபர்களை கைது செய்துள்ள பொலிஸார் சந்தேக நபர்களை நாளை நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளன. (ஜ)

## வீதி அபிவிருத்தி அதிகார சபை வடிகாலில் கழிவகற்றுவது யார்?

### தர்க்கத்தில் ஈடுபட்ட அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடிகால்களில் சேருகின்ற கழிவுகளை அகற்றுவது யார் என பிரதேச சபையினரும் அதிகார சபையினரும் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.


யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கு பற்றிய யாழ்.மாவட்டச் சபைத் தவிசாளர் ஒருவருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவருக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தம்மால் அமைக்கப்பட்ட வடிகால்களில் சேருகின்ற கழிவுகளை அந்தந்தப் பகுதியில் உள்ள பிரதேச சபைகளே அகற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

இல்லாவிடில் குறித்த வடிகாலில் சேருகின்ற மண்ணை மட்டும் தாம் அகற்றுவோம் எனவும் ஏனைய கழிவுகளை பிரதேச சபையினரே அகற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன் போது,பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தற்போது யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள டெங்கு நோய்த் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு அனைவரும் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டார். (5-10)

## தனங்கிளப்பு வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை



(சாவகச்சேரி)

ஏ9 வீதியையும் ஏ-32 வீதியையும் இணைக்கும் 4 கிலோ மீற்றர் நீளமான தனங்கிளப்பு வீதியை காப்பெற் வீதியாக அமைத்துத் தருமாறு கோரி தென்மராட்சி வாழ் மக்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு நூற்றுக்கு மேற்பட்டோரின் கையொப்ப பிரதிகளுடன் கடந்த 7 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர்.

அவர்கள் அக்கடிதத்தில், யாழ்.மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தின் ஏ-9 வீதியையும், ஏ-32 வீதியையும் இணைக்கும் ஏறத்தாழ 4 கிலோ மீற்றர் நீளம் கொண்ட தனங்கிளப்பு வீதி தொடர்பாக தங்களிடம் முறையிட வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகவுள்ளது.

இவ் வீதி தொடர்பாக தென்மராட்சி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பல்வேறு தரப்பினராலும் முக்கியத்துவப்படுத்தி கூறப்பட்டபோதிலும் இதுவரை ஆக்கபூர்வமாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள இவ் வீதியின் குன்று குழிகளை நிரவும் செயற்பாடுகளிலே ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வீதி ஊடாக சுற்றுலாப் பயணிகள், விவசாயிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணம் செய்கின்றனர். தனங்கிளப்பு வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் நேர விரயம் ஏற்படும் அதேநேரம் வாகன தேய்மானமும் ஏற்படுகின்றது. இவ்வீதி ஊடாக மன்னாரில் இருந்து பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பேருந்து சேவைகளும், கனரக வாகனப் போக்குவரத்து, பூநகரி, மறவன்புலவு ,தனங்கிளப்பு, நாவற்குழி மற்றும் கோவிலாக்கண்டி போன்ற பிரதேச மக்களும் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

தற்போது "ஐ" கருத்திட்டத்தில் தென்மராட்சியில் 22வீதிகளை காப்பெற் வீதிகளாக மாற்றுவதற்கு முன்மொழிவுகள் இடம்பெற்று சில வீதிகளுக்கான ஒப்பந்தங்களும் நிறைவடைந்துள்ளன என்பதனை அறிய முடிகிறது. இவ்விடயம் வரவேற்கத்தக்கதாக இருப்பினும் தனங்கிளப்பு வீதி இதனுள் உள்ளடக்கப்படாமை வருத்தமளிக்கின்றது. அத்துடன் கம்பெரலிய செயற்றிட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்ட சில வீதிகளின் பெயர்களும் "ஐ" கருத்திட்டத்தில் காப்பெற் புனரமைப்பிற்காக மீண்டும் தெரிவு செய்யப்பட்டமை மிகவும் மனக் கிளர்ச்சியினை ஏற்படுத்துகின்றது.

அத்துடன் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைத் தவிர்த்து வேறு வீதிகளைத் தெரிவு செய்தமை மக்களாகிய எமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு தாங்கள் தனங்கிளப்பு வீதியினை வெகுவிரைவில் காப்பெற் வீதியாக மாற்றுவதற்கு ஆவன செய்வீர்கள் என நம்புகிறோம் என மேலும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இக் கடிதப் பிரதிகளை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர்,வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் மற்றும் யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளனர். (ஜ-5-30)

# கடற்படைக்கு சீனா நன்கொடை

(கொழும்பு)

கடற்படையின் பசுமைநீல மற்றும் நீல சுற்றாடல் கருத்திட்டத்திற்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் சீன அரசினால் இலங்கைக் கடற்படைக்கு 50 துவிச்சக்கர வண்டிகளும் 3 மின்சார வண்டிகளும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

கடற்படைத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற வைபவத்தின் போது இவை வழங்கி வைக்கப்பட்டன. இந்நன்கொடைப் பொருட்களை சீன தூதரகத்தின் கடல் மற்றும் விமானப் படை பிரதி பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினனட் கேணல் சாங்கு வான் ஜிங் கடற்படைத் தள பதி வைஸ் அட்மிரல்பியல் டி சில்வாவிடம் கையளித்தார்.

சீன மக்கள் குடியரசினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர மற்றும் மின்சார வண்டிகளை திருகோணமலை கடற்படை இறங்குதுறை பிரதேசத்தில் ஈடுபடுத்துவதற்கு கடற்படை உத்தேசித்துள்ளது. திருகோண மலை கடற்படை இறங்குதுறை பிரதேசமானது கடற்படையினால் முன்னெடுக்கப்படும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு திட்டமான "நீல ஹரித சங்க் ராமய" திட்டத்தில் உள்ளடங்கும் பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

# முன்னாள் மாநகர முதல்வர் பதவிக்காலத்தில் பயன்படுத்திய பொருட்களை ஒப்படைத்தார்

## பிரதம கணக்காளர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தனது பதவிக் காலப்பகுதியின் போது பயன்படுத்திய மடிக்கணனி மற்றும் ஏசியை பணிக்காலம் முடிவடைந்த பின் மீள ஒப்படைத்துள்ளார் என யாழ்.மாநகர பிரதம கணக்காளர் உறுதிப்படுத்தினார்.

யாழ்.மாநகரசபையில் கடந்த வாரம் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தின் போது முன்னாள் முதல்வர் தனது பதவிக் காலத்தில் பயன்படுத்திய மடிக்கணனி (லப்டொப்) மற்றும் தனது வீட்டுக்குப் பொருத்திய ஏசி என்பவற்றை சபைக்கு ஒப்படைக்கவில்லை என உறுப்பினர்கள் சிலரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் முன்னாள் முதல்வரின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்.மாநகர சபையின் பிரதம கணக்காளரால் குறித்த விடயம் தொடர்பில் எழுத்துமூலம் தெளிவுபடுத்தப்பட்டது. (இ-10)

## வைத்தியர் ஷாபி விவகாரம்

# ஆரம்பத்திலிருந்து மீள வாக்கு மூலங்களை பதிவு செய்ய சி.ஐ.டிக்கு நீதிமன்றம் உத்தரவு

(குருநாகல்)

சட்டவிரோத கருத்தடை விவகாரம் தொடர்பில் குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரசவ மற்றும் மகப்பேற்று பிரிவின் வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் நீதவான் நீதிமன்ற விசாரணைகள் நேற்று முன்தினம் குருநாகல் பிரதான நீதவான் சம்பத் ஹேவாவசம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.



இதன்போது பிணையிலுள்ள வைத்தியர் ஷாபி மன்றில் ஆஜராகியிருந்தார். அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டாரவின் கீழ், சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், சைனாஸ் அஹமட், பசன் வீரசிங்க, ஹரித்த நவரத்ன பண்டார உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவொன்று ஆஜரானது.

பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் தாய்மார்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான கல்யானத்த திரானகமகே, மொஹாம், சட்டத்தரணி சானக உள்ளிட்டோர் ஆஜராகினர்.

இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பில், அதன் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.திலகரத்ன, சமூக கொள்கை விசாரணை அறையின் புதிய பொறுப்பதிகாரி ஜெயசுந்தர, பொலிஸ் பரிசோதகர் மொஹான், பொலிஸ் கான்ஸ்டபிள் சில்வா ஆகியோரைக் கொண்ட குழுவினர் ஆஜராகினர்.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரசவ மற்றும் மகப்பேற்று பிரிவின் வைத்தியராக இருந்த சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபி முஸ்லிம் என்பதாலேயே அவர் துரத்தி இலக்கு வைக்கப்படுவதாக அவரது சட்டத்தரணி ஜனாதிபதி சட்டத்தரணி நவரத்ன பண்டார இதன்போது நீதிமன்றில் தெரிவித்தார்.

இனவாதத்தின் அடிப்படையிலேயே குறித்த வழக்கு சோடிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் ஷாபி தொடர்பிலான இந்த விவகாரத்தில், அர்சியலமைப்பின் 12 (3) ஆவது சரத்து மீறப்பட்டுள்ளதாகவும் அதனால் சாட்சிகள் இன்றி குற்றம் சாட்டப்பட்டுள்ள தனது சேவை பெறுநரை விடுவிக்க வேண்டும் எனவும் அவர் வாதிட்டார்.

இதன் பின்னர் விடயங்கள் அனைத்தையும் ஆராய்ந்த குருநாகல் நீதவான் சம்பத் ஹேவாவசம், சி.ஐ.டி. கோராமலேயே விசேட உத்தரவொன்றினை சி.ஐ.டிக்கு வழங்கினார்.

இதுவரை இவ்விவகாரத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்களில் சில பரஸ்பர தன்மைகள் உள்ளன.

எனவே அவை தொடர்பில் கருத்திற் கொண்டு ஆரம்பத்தில் இருந்து மீள வாக்கு மூலங்களை பதிவு செய்யவும் என புதிய விசாரணைக் குழுவுக்கு உத்தரவிட்டார்.

அதன்படி புதிய விசாரணைக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஒரு மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டு இவ்வழக்கு எதிர்வரும் 2020 ஜனவரி 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஜ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1916

### அனுஷ்கா



கடவுள் சிலவற்றை தாமதமாக கொடுத்தாலும் தரமானதாக கொடுப்பார்... சோர்ந்து போகாதே!

### சஜீ

அது பிடிக்காது இது பிடிக்காது என்று அம்மாவிடம் சண்டை போட்டவர்கள்...



இன்று வெளிநாடுகளில் மனதிற்கு பிடிக்காத உணவை கட்டாயமாக சாப்பிடுகின்றனர்...!

### குமணன்

தன்னுடைய வாழ்க்கை என்று வரும்போது எல்லோருமே "சுயநலவாதி" தான்...



### கலைவாணி



அம்மாவின் கைக்குள் இருந்த வரை உலகம் அழகாக தான் தெரிந்தது...


### ஆகாஷ்



உண்மை உள்ளங்களை வேதனைப்படுத்தினால் உனக்கு கடுகளவு நிம்மதியும் கிடைக்காது...

### பத்மினி

முள்ளின் வலி ஒரு நிமிடம்...



சொல்லின் வலி பல வருடம்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அனைத்து மதங்களுக்கும் சமமான அந்தஸ்தை வழங்கிப் பாதுகாப்பேன்

## கிழக்கு ஆளுநர் அனுராதா உறுதி

(திருமலை)

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மதங்களுக்கும் சமமான அந்தஸ்தை வழங்கி அதனூடாக மத ஸ்தலங்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் கூடிய கவனம் எடுப்பேன் என கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதி என்னை நியமித்த போது ஆரம்பத்தில் எனக்கும் தயக்கம் இருந்தது. எனினும் இந்த நியமனத்தைக் கொண்டு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தலாம் என துணிவு பிறந்தது.

அழகிய ரம்மியமான கிழக்கு மாகாணத்தை மேலும் அழகுபடுத்த வேண்டியது எமது கடமை. அதனை முன்னெடுக்க என்னுடன் அனைவரும் கைகோர்க்க வேண்டும்.

கிழக்கு மாகாணம் இயற்கை வளமும் மனித வளமும் நிறைந்துள்ள பிரதேசமாகும். இவ்விரு வளங்களையும் கொண்டு நாம் எல்லோருமாக இணைந்து இந்த மாகாணத்தினை கட்டியெழுப்பி அதன் மூலமாக நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும்.

இப்பொழுது இளைஞர்கள் தாமாகவே முன்வந்து நாட்டை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தில் இணைந்திருக்கின்றனர். யாரும் கட்டாயப்படுத்தாமல் அவர்களாகவே முன்வந்தமை வரவேற்கத்தக்கது.

நாட்டில் நிலவுகின்ற வறுமையை ஒழிப்பதற்காக பசுமை புரட்சி எனும் திட்டம் முன்னெடுக்கப்படும்.

வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி அதனூடாக பொருளாதாரத்தைப் பெறுவதோடு ஆரோக்கிய உணவு நுகர்வையும் ஊக்குவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரஞ்சித் டி சொய்சாவின் வெற்றிடத்திற்கு வருண பிரியந்த லியனகே நியமனம்



(கொழும்பு)

உயிரிழந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சாவின் வெற்றிடத்திற்கு வருண பிரியந்த லியனகே நியமிக்கப்பட்டார்.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ரஞ்சித் டி சொய்சாவுக்கு அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளை பெற்ற வருண பிரியந்த லியனகேவை குறித்த வெற்றிடத்தில் பெயரிடுவதற்கு தீர்மானித்ததாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா உடல்நலக்குறைவால் சிங்கப்பூர் வைத்தியசாலை ஒன்றில் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஒலிம்பியாட் போட்டியில் இலங்.மாணவர்களுக்கு வெண்கலம்



(கொழும்பு)

16 ஆவது சர்வதேச கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகள் கடந்த 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை கட்டாரில் நடைபெற்றது.

அதில் 72 நாடுகளைச் சேர்ந்த 15 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களில் இலங்கை சார்பில் பங்கேற்ற மாணவர்கள் வெண்கல பதக்கத்தை பெற்றுக் கொண்டனர்.

இந்தப் போட்டியில் களுத்துறை பொக்ஸ்வெல் கல்லூரி சார்பில் ரவிந்து கன்னங்கர, இரத்தினபுரி சிவலி வித்தியாலயத்தின் கங்காதி ஹிரு குமார சிறி, தேஸ்டன் கல்லூரியின் கவீன் கருணாரத்ன, நாலந்த வித்தியாலயத்தின் சித்தும் பெர்னாண்டோ ஆகியோர் பங்கேற்றனர்.

அவர்களுடன் குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தின் ரவிந்து ரணதுங்க மற்றும் யாழ். இந்துக் கல்லூரி சார்பில் ஆனந்த கிருஷ்ணன் அபிலாஸ் ஆகிய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இவர்கள் வெண்கலப் பதக்கத்துடன் நேற்று முன்தினம் மாலை 4.30 அளவில் கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களை அவர்களின் பெற்றோர் உள்ளிட்ட பலர் வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்தனர். (ஜ)

# செய்தித்துளிகள்

## சுற்றாடல் தொடர்பான முறைப்பாட்டிற்கு விசேட எண்



(கொழும்பு)

சுற்றாடல் தொடர்பான தகவல்கள் மற்றும் முறைப்பாடுகளை பொது மக்கள் உடனடியாகப் பதிவு செய்யும் பொருட்டு அவசர தொலைபேசி இலக்கங்களை பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கமைய சுற்றாடல் தொடர்பான தகவல்கள் மற்றும் முறைப்பாடுகளை பொது மக்கள் 011 597 8725, 011 597 8726 அல்லது 011 597 8728 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை வழங்க முடியும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஜ)

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

(ஹபரன)

மின்சாரம் தாக்கியதில் நபர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் ஹபரன-கிரிவடுன்ன பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கலேவல, பட்டிவெல பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மின்சார சபையின் புதிய மின்சக்தி அமைப்பு ஒன்றை உருவாக்கி கொண்டிருந்த போதே அவர் மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் ஹபரண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் சிவன் கோவில் நினைவாலயம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறுமென தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி.தேவந்தினி பாபு அறிவித்துள்ளார்.

எனவே இவ்விடயம் தொடர்பாக ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொண்டு தமது ஆலோசனைகளை வழங்குமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ஜ-5-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 140 | 180 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 240 | 170 | 250 |
| தக்காளி | 160 | 250 | 180 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 70 | 80 |
| கோவா | 150 | 150 | 160 | 100 | 160 |
| கரட் | 300 | 250 | 320 | 120 | 320 |
| பூசணி | 80 | 50 | 60 | 70 | 80 |
| புடோல் | 140 | 100 | 180 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 400 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 150 | 160 |
| பாகற்காய் | 360 | 350 | 320 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 70 | 120 |
| பயற்றங்காய் | 260 | 250 | 260 | 200 | 240 |
| லீக்ஸ் | 300 | 240 | 320 | 300 | 400 |
| பீற்றூட் | 150 | 200 | 200 | 70 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 120 | 240 |
| முருங்கைக்காய் | — | — | 800 | — | — |
| போஞ்சி | 250 | 220 | 240 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 180 | 140 | 140 |
| கீரை-1பிடி | 60 | 40 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 80 | 150 | 120 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 300 | 240 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 500 | — | 280 | — | — |
| முள்ளங்கி | 150 | 100 | 200 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 40 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 80 | 160 | 120 |

## பொது அறிவுத் தகவல்கள்

• சூரியனில் ஆண்டுக்கு ஏழு முறை கிரகணம் தோன்றுகிறது.

• ஒருவரின் எடை பூமியில் 70 கிலோ என்றால், சூரியனில் அவரது எடை 2000 கிலோ.

• அண்டார்டிகாவில் செப்டெம்பர் 21 ஆம் திகதி மட்டும் சூரியன் உதயமாகும்.

• விண்வெளியில் பயணம் செய்த முதல் மிருகம் லைக்கா (Laika) என்ற நாய்.

• விண்வெளி வீரர்களுக்கு உணவாகப் பயன்படுவது பாசி குளோரெல்லா.

• பூமி தன்னைத்தானே ஒரு முறை சுற்றிக்கொள்ள 23 மணிநேரமும் 56 நிமிடங்களும் ஆகின்றன.

• அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் பெயர் நாசா.

• இரவு வானில் கிட்டத்தட்ட 3000 நட்சத்திரங்களை, வெறும் கண்களாலேயே நம்மால் பார்க்க முடியும்.

• பூமி விண்வெளியில் சுமார் 1,07,343 கி.மீ.வேகத்தில் சுற்றுகிறது.

• சூரிய கிரகணம் சுமார் 8 நிமிடங்கள் மட்டுமே நிகழும். ஆனால் சந்திர கிரகணம் 10 நிமிடங்களுக்கு மேல் நீடிக்கலாம்.

• நட்சத்திரங்கள் என்பது சொந்த ஒளியைக் கொண்டு மிளிரும். கிரகம் என்பது சூரிய ஒளியை வாங்கிப் பிரதிபலிக்கும்.

• சூரிய வெளிச்சத்தில் பூமியின் நிழல் சுமார் 8,59,000 மைல்கள் தூரம் விழும்.

• ஒரு விண்மீன் வெடித்துச் சிதறும் ஒளி, நம் கண்ணுக்குத் தெரிய ஆகும் காலம் 1,70,000 ஆண்டுகள்.

• உலகிலேயே முதல் வான்வெளிப் புகைப்படம், அமெரிக்க உள்நாட்டுச் சண்டையின்போது பரசூட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

• யுரேனஸ் கிரகத்தில் கோடைகாலம் 21 ஆண்டுகளும், குளிர் காலம் அதையடுத்த 21 ஆண்டுகளும் நீடிக்கின்றன.

• மனிதனை விண்வெளிக்கு அனுப்பிய 14 ஆவது நாடு இந்தியா.

• ஒரு மின்னல் 250 கோடி வோள்ட்ஸ் மின்சக்தி கொண்டது.

• நிலவு ஒளி பூமிக்கு வர எடுக்கும் நேரம் 1.3 நொடி.


• நிலவை முதலில் டெலஸ்கோப் வழியாகப் பார்த்தவர் கலிலியோ.

• பூமி சந்திரனுக்கு மிக அருகில் வருவது டிசெம்பர் மாதத்தில். பூமி சூரியனுக்கு மிக தொலைவில் போவது ஜ"லை மாதத்தில்.

• 1970 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி பூமியிலிருந்து இயக்கப்பட்ட லூனா கோடி என்ற ஆளற்ற ஓடமே சந்திரனில் இறங்கிய முதல் ஓடமாகும்.

• 1866 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பௌர்ணமியே தோன்றவில்லை. அதே ஆண்டு ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் இரண்டு பௌர்ணமிகள் தோன்றின. இதுபோன்று அதிசயம் 25 இலட்சம் ஆண்டுகளுக்கு பிறகு தான் தோன்றுமாம்.

## சின்ன சின்ன தக்காளி



சின்ன சின்ன தக்காளி
சிவப்பு நிற தக்காளி
சின்ன சின்ன தக்காளி
சிவப்பு நிற தக்காளி

வாயில் போட்டால் தித்திக்கும்
விற்றமின்கள் கொடுக்கும்
தம்பி நீயும் நானுமே

பங்கு போட்டுத் தின்னலாம்
தம்பி நீயும் நானுமே
பங்கு போட்டுத் தின்னலாம்




# எங்கிருந்தோ வந்தார்



அது ஒன்றும் அவ்வளவு பெரிய குடியிருப்பு இல்லை. நான்கு மாடிகளில் மொத்தம் 24 வீடுகள்தான். ஆயினும் சுந்தருக்கு அந்தக் குடியிருப்பில் நான்கைந்து பேரைத்தான் ஓரளவுக்காவது தெரியும். பலரின் முகம் கூடத் தெரியாது. அவன் அப்பாவுக்கு இன்னும் நான்கைந்து பேரைத் தெரிந்திருக்கலாம்.

மாடிப்படிகளிலும் லிஃப்டுகளிலும் சந்திக்கும் சில முகங்கள் பரீட்சயமானவையாகத் தோன்றும். சில சமயம் புன்முறுவல்கள் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுவது உண்டு. பேசுவது என்பது மிக அரிது. குடியிருப்பில் அவ்வப்போது எழும் பிரச்சினைகளைக் கூட விவாதிப்பதில்லை. அவற்றைக் குடியிருப்பு சங்கச் செயலரிடம் சொல்வதோடு சரி!

இந்த நிலையில், அந்தக் குடியிருப்பில் வசிக்கும், சுந்தர் அவ்வப்போது பார்த்திருக்கும் ஒரு பெரியவர் அவனை வழியில் நிறுத்திப் பேசியது அவனுக்கு வியப்பாக இருந்தது.

"ஏம்ப்பா, நீ எஞ்சினியரிங் படிச்சுக்கிட்டிருந்தே போலிருக்கே?" என்றார்.

"ஆமாம் சேர்!" என்றான் சுந்தர். "இவருக்கு எப்படி இது தெரியும்?" என்ற கேள்வியை மனதில் எழுப்பியபடி. "ராமலட்சுமி எஞ்சினியரிங் காலேஜிலதானே படிச்சுக்கிட்டிருந்தே?"

"உங்களுக்கு எப்படி சேர்...?"

"நான் மெயின் ரோட் பக்கம் நடந்து போகும்போது, நீ அந்த காலேஜ் பஸ்ல ஏறிப் போனதை ரெண்டு மூணு தடவை பாத்திருக்கேன்" என்றவர் தொடர்ந்து "படிப்பு முடிஞ்சு போச்சா?" என்றார்.

"முடிஞ்சிடுச்சு சேர்" என்றான்.

"வேலைக்குப் போறியா?"

"இன்னும் இல்லை..." என்றான் சுந்தர் சற்று சங்கடத்துடன்.

"கம்பஸ்ல வேலை கிடைக்கலையா?" என்றார் பெரியவர் விடாமல்.

"நான் படிச்சது மெக்கானிகல் எஞ்சினியரிங். கம்பஸ்ல கிடைச்ச வேலையெல்லாம் சாஃப்ட் வேர்லதான். எனக்கு எஞ்சினியரிங் வேலைக்குப் போறதிலதான் விருப்பம்."

"நல்ல வேலை கிடைக்கும். கவலைப்படாதே" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

இதைத் தன் பெற்றோர்களிடம் சொன்ன சுந்தர் "அப்பா! உனக்கு அவரைத் தெரியுமா?" என்றான்.

"பார்த்திருக்கேன். மூணாவது மாடியில இருக்காரு. பேரு வெங்கடாசலம். ஆனா அவர்கிட்ட பேசினது இல்லை. அவர் எதுக்கு உன்னை விசாரிச்சார்? சும்மாவா?" என்றார் அவன் அப்பா.

"வம்புதான். வேற என்ன?" என்றாள் அவன் அம்மா. "உனக்கு சீக்கிரம் ஒரு வேலை கிடைச்சு, இவங்க மாதிரி ஆசாமிகள் மூஞ்சியில எல்லாம் கரியைப் பூசணும்" என்று வாழ்த்தினாள்!

இரண்டு நாட்கள் கழித்து, அழைப்பு மணி அடித்தது. சுந்தர்தான் கதவைத் திறந்தான்.

வெங்கடாசலம் நின்று கொண்டிருந்தார். "அப்பா இல்லியே!" என்றான் சுந்தர்.

"இல்லியா? பரவாயில்லை. ஆனா நான் பேச வந்தது உன் விடயமாத்தான். உள்ள வரலாமா?"

"வாங்க சேர், உக்காருங்க!"

"ப்ரோடெக் இன்னோவேஷன்ஸ்"னு ஒரு கம்பனி இருக்கே தெரியுமா?"

"தெரியுமே! ரொம்ப நல்ல கம்பனி ஆச்சே அது?"

"அதில வேலை கிடைச்சா போவியா?"

சுந்தர் திகைப்புடன் "எப்படி சேர்? அங்கே வேலை கிடைக்கிறது சுலபம் இல்லியே!" என்றான்.

"என்னோட சொந்தக்கார பையன்தான் அங்க ஜெனரல் மானேஜரா இருக்கான். பேரு கிருஷ்ணன். உன்னைப்பத்தி அவன்கிட்ட ஃபோன்ல பேசினேன். பையனை வரச் சொல்லுங்க பாக்கலாம்னான். "பாக்கறதெல்லாம் இல்லை. பையன் நமக்குத் தெரிஞ்சவன். நீ வேலை கொடுக்கிறதாச் சொன்னாத்தான் அவனை வரச் சொல்லுவேன்"னேன். சிரிச்சுக்கிட்டே "நீங்க ஒரு ஆளை அனுப்பி வச்சா, அவருக்கு நான் வேலை கொடுக்காம இருப்பேனா?"ன்னான். அதனால உனக்கு வேலை நிச்சயம்!"

அவர் பேச்சைக் கேட்டபடி உள்ளிருந்து சுந்தரின் அம்மா வெளியில் வந்தாள்.

"சேர்! நான் உங்ககிட்ட பேசினது கூட இல்லை. எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்யிறதா சொல்றீங்களே!" என்றான் சுந்தர் உணர்ச்சி மிகுந்தவனாக.

"நாம எல்லாரும் ஒரே இடத்தில இருக்கோம். ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்யக் கூடாதா என்ன? முன்ன ஒரு தடவை கிருஷ்ணன் எங்கிட்ட "மாமா! எங்க கம்பனியில தெரிஞ்சவங்க மூலமா வர ரெஃபரன்ஸை வைச்சுத்தான் வேலைக்கு ஆள் எடுப்போம். உங்களுக்குத் தெரிஞ்ச நல்ல பையன்களா இருந்தா சொல்லுங்க"ன்னு சொல்லியிருந்தான். உன்னைப் பார்த்ததும் எனக்கு அது ஞாபகம் வந்தது. நாளைக்கு உன்னை வரச் சொல்லியிருக்கான். போய்ப் பார்த்து வேலையில சேர்ந்திடு" என்று எழுந்தார்.

"கொஞ்சம் கோப்பி குடிச்சிட்டுப் போங்களேன்" என்றாள் அவன் அம்மா.

"இப்பத்தாம்மா வீட்டில குடிச்சேன். வயசான காலத்தில அதிகமா கோப்பி குடிக்கக் கூடாது" என்றார் அவர் சிரித்தபடி.

"உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல சேர்" என்று சுந்தர் தடுமாற்றத்துடன் சொல்லிக்கொண்டிருந்தபோதே அவர் எழுந்து சென்று விட்டார்.

"எவ்வளவு நல்ல மனுஷன்! அக்கறையோடதான் உன்கிட்ட விசாரிச்சிருக்காரு. நான் அவசரப்பட்டு வம்புக்கு அலையறவர்னு சொல்லிட்டேனே" என்று வருந்தினாள் அவன் அம்மா.

"நாம அவருக்கு எந்த உதவியும் செஞ்சதில்லை. அவரை எத்தனையோ தடவை வழியில பாத்திருக்கேன். வயசில பெரியவர்ங்கிறதுக்காக விஷ் பண்ணினது கூட இல்ல. ஆனா அவரா வலுவில வந்து இவ்வளவு பெரிய உதவி செஞ்சிருக்காரே! என்னால நம்பவே முடியல!" என்றான் சுந்தர்.

குறள் 101

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

பொருள்:

நம்மிடமிருந்து எந்த உதவியும் பெறாத ஒருவர் முன் வந்து நமக்கு ஒரு உதவி செய்தால், அவருக்கு இந்த உலகையும் வானுலகையும் கொடுத்தால் கூட, அது அந்த உதவிக்கு ஈடாகாது.

வல்லவனைக் கண்டு அஞ்சாதீர்கள் ! உங்களின் நீடித்துழைக்கும் ஆற்றல் மட்டுமே அனைத்தையும் வெல்லும். – ஜாக்கி கினீசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீதியரசர் விக்னேஸ்வரன் பிரதமர் மோடியைச் சந்திக்க வேண்டும்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புதமிழ்மக்களுக்கு ஆரோக்கியமான தலைமையல்ல என்பது நிரூபணமாயிற்று.

கூட்டமைப்பின் அரசியல் என்பது சுயநலம் சார்ந்தது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இதை நாம் கூறுவதற்காக கூட்டமைப்பில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் தமிழ்ப்பற்று இல்லாதவர்கள் என்று யாரும் நினைத்து விடக்கூடாது.

கூட்டமைப்புக்குள்ளும் நேர்மையான தமிழ்ப் பற்றாளர்கள் இருக்கின்றனர். ஆனால் கூட்டமைப்பின் தலைமையை எதிர்க்கின்ற சக்தி அவர்களிடம் இல்லாத காரணத்தால் அவர்கள் பேசாமல் மௌனித்துள்ளனர்.

எனினும் கூட்டமைப்பின் தலைமை தமிழினத்துக்குப் பாதகமான தீர்மானங்களை நடைமுறைப்படுத்திச் செல்லுகையில் அதனை எதிர்த்துக் கதைக்காமல் இருப்பதென்பது தர்மமன்று.

ஆக, கூட்டமைப்பின் தலைமையை எதிர்க்க முடியவில்லை எனும்போது அதுபற்றிப் பொது மக்களுக்கு அறிவித்துவிட்டு அதிலிருந்து விலகிக் கொள்வதுதான் நேர்மையானவர்களின் கடமையாக இருக்கும்.

எதுஎவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடந்த காலப்போக்கு எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு எதிரானதாக இருப்பதன் காரணமாக தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தெரிவு பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கருத்து.

தவிர, இப்போது இருக்கின்ற மிக இறுக்கமான சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கான ஒரே உதவி அண்டை நாடான இந்தியாவாகவே இருக்க முடியும்.

எனவே இலங்கைத் தமிழர்கள் இந்தியாவைச் சிக்கனப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

அதிலும் குறிப்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவொன்று உடனடியாகச் சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறுவது கட்டாய தேவையாகும்.

இதைச் செய்யத் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் ஈழத் தமிழர்கள் மனத்தால் பாதிக்கப்படும் சூழ்நிலை தொடரவே செய்யும்.

தவிர, இந்தியாவுக்கு வாருங்கள் பேசுவோம் என்று கூட்டமைப்புக்கு பிரதமர் மோடி அழைப்பு விட்டிருந்தும் இன்னமும் கூட்டமைப்பு இந்தியா செல்லவோ பிரதமர் மோடியைச் சந்திக்கவோ இல்லை.

இங்குதான் கூட்டமைப்பின் பொறுப்பற்ற தன்மை வெளிப்படுகிறது. கூட்டமைப்பைப் பொறுத்தவரை பிரதமர் மோடியைச் சந்திப்பதானது தமது கட்சியின் அரசியல் செல்வாக்கை அதிகரிப்பதாக இருக்க வேண்டும் என்பதுதான்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு சற்றுமுன்னதாக பிரதமர் மோடியைச் சந்திக்கும்.

அந்தச் சந்திப்பை தமது தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்தும். இதனையே அவர்கள் செய்யவுள்ளனர்.

உண்மையில் பிரதமர் மோடியுடனான சந்திப்பு என்பது தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு தருவதாக அமைய வேண்டும்.

எனவே காலதாமதமின்றி நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவொன்று அவசரமாக பிரதமர் மோடியைச் சந்திப்பது மிக மிக அவசியமாகும்.

### சட்ட விரோத வலைப் பயன்பாடு
## மன்.நீதிமன்றில் சரணடைந்த மூவரின் விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார்)

கடந்த 26 ஆந் திகதி மன்னார் கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளால் களப் பணியின் போது சட்ட விரோதமான முறையில சவுதிபார் கரைவலைத் தொழில் பிரதேசத்தில அத்துமீறிப் பாயப்பட்டிருந்த பட்டி வலைத தொகுதிகள் கைப்பற்றப்பட்டது.

அவ்வாறு கைப்பற்றப் பட்ட அரச உடைமைக் குரிய சான்றுப் பொருட்களையும் அதற்காக பயன் படுத்திய கூலிக்கமர்த்திய படகு மற்றும் இயந்திரத்தையும் குறித்த பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் ஐவர் சட்டவிரோதமான முறையில் தம்வசப்படுத்திக் கொண்டதுடன் அரச கடமையினை செய்வதற்கு இடையூறு விளைவித்தனர்.

இது தொடர்பில் மன்னார் பொலிஸ் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதன் பின் குறித்த ஐவரும் தலைமறைவாகினர். மன்னார் பொலிஸாரால் தேடுதல் நிகழ்த்தப்பட்ட நிலையில் குறித்த ஐவரில் மூவர் மன்னார் நீதிமன்றில் சரணடைந்து பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பின்பு நேற்றைய தினம் வழக்கினை விசாரித்த நீதவான், குறித்த மூவரையும் நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவொன்றினைப் பிறப்பித்தார்.

சந்தேக நபர்களால் பயன் படுத்தப்பட்ட படகு, இயந்திரம் மற்றும் அரசுடைமைப் பொருளான பட்டி வலைத் தொகுதி என்பன ஏற்கனவே மன்னார் நீதவான் நீதிமன்றில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு பாரப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வவுனியாவில் மின்தடை

வவுனியாவில் இம்மாதம் 14,16,17 ஆகிய தினங்களில் மின்சாரம் தடைப்படும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

குறித்த தினங்களில் காலை 8மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்சாரம் துண்டிக்கப்படுவதாகவும் அத்தியாவசிய பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் துண்டிக்கப்படுவதாக மின்சாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நேரங்களில் வைத்தியசாலை மற்றும் மக்கள் பயன்பாட்டிற்கான பொது இடங்கள் முன்கூட்டியே மின் தடையை நிவர்த்தி செய்யக் கூடிய மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

எனவே மக்கள் அனைவரும்" மின்தடையினை அடுத்து தேவையான முன்னாயத்த நடவடிக்கைளை எடுக்குமாறு மின்சார சபை கேட்டுக்கொள்கின்றது.

14.12.2019 காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வெளிக்குளத்திலிருந்து துட்டுவாகை வரை , கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை, செட்டிகுளம் நகரம் , இராசேந்திர குளம், பம்பைமடு , சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, omega line, மக்கள வங்கி வவுனியா, தேசிய சேமிப்பு வங்கி வவுனியா, இலங்கை வங்கி வவுனியா, இலங்கை தொலைத் தொடர்பு வவுனியா, வவுனியா வைத்தியசாலை, சுகாதார திணைக்களம், வவுனியா மாவட்ட செயலகம், வவுனியா நீர்ப்பாசன சபை, வவுனியா புகையிரத நிலைய வீதி, பூங்கா வீதி

16.12.2019 காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கணேசபுரம் கிராமம், மகாறம்பைக் குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், செட்டிகுளம் நகரம், ஒட்டறங்குளம், சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி , கஜசிங்கபுர இராணுவ முகாம, செட்டிகுளம் தொலைத் தொடர்பு நிலையம், செட்டிகுளம் , பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், செட்டிகுளம் வைத்தியசாலை, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், **Omega line**, பறயனாளங்குளத்திலிருந்து முகத்தான்குளம் வரை

17.12.2019 காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கணேசபுரம் கிராமம், மகாறம்பைக் குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், செட்டிகுளம் நகரம், ஒட்டறங்குளம், கொக்கெலியவிலிருந்து ஓமந்தை வரை, ஓமந்தை வீட்டுத்திட்டம், ICT கல்லூரி, Union Alliance Ltd, AMP ஓமந்தை , ஓமந்தை மீன்பிடி வலை தொழிற்சாலை , இராஜேந்திரகுளம், சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி , பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், omega line, ஈரப்பெரியகுளத்திலிருந்து பூ ஓயா வரை, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், SLBC ஈரப்பெரியகுளம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (9-250)

## ஐ.தே.கவின் செயற்குழுவை உடனடியாக கூட்ட வேண்டும்
### 26 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஐ.தே.க தலைவர் ரணிலுக்கு கடிதம்

(கொழும்பு)

ஐ.தே.கவின் செயற குழுவை உடனடியாக கூட்ட வேண்டுமென வலியுறுத்தி 26 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதம், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கையொப்பமிட்டவர்களில் 25 பராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். ரோஸி சேனநாயக்கவும் இதில் கையொப்பமிட்டுள்ளார்.

ரஞ்சித் மத்தும பண்டார இந்த கடிதத்தை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கட்சியின் மறுசீரமைப்பு குழு உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துகோரள ஆகியோர் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிற்கு அதிருப்தி தெரிவித்து, குழுவிலுள்ள வஜிர விஜேவர்த்தன, லக்ஸ்மன் கிரியெல்ல, ஆசு மாரசிங்க ஆகியோர் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.(ம-3)

## தென்கிழக்காசிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியான் - ASEAN) நாடுகளின் தூதுவர்கள் குழுவினர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தனர்.

தாய்லாந்து, இந்தோனேசியா, மியன்மார், வியட்நாம், மலேசியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் கொன்சியுலர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதுடன், அவர்கள் முதலில் தமது வாழ்த்துகளை ஜனாதிபதிக்கு தெரிவித்தனர்.

இலங்கைக்கும் தமது நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு தொடர்புகளை விருத்தி செய்தல் தொடர்பாக இதன்போது கலந்துரையாடியதுடன், இதற்காக தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் எனவும் தூதுவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். (ம-3)

## மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் குடை சாய்ந்தது

(தருமபுரம்)

மணல் ஏற்றிக் கொண்டு சென்ற டிப்பர் வாகனம் ஒன்று மழை காரணமாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்துள்ளது.

இச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை கனகராஜன் குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொக்காவிலில் இருந்து மாங்குளம் நோக்கி மணல் ஏற்றி சென்ற போது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் வாகன சாரதி சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்.

(ம-3,316)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

விழிப்பதற்கே உறக்கம்; வெல்வதற்கே தோல்வி; எழுச்சி பெறுவதற்கே வீழ்ச்சி.

- ராபர்ட் பிரவுனிங

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கடவுளே எல்லோருக்கும் குரு



எல்லா அறிவும் நம்முள் இருக்கிறது என்பது உண்மையே. அதை வெளிப்படுத்துவதற்கு மற்றோர் அறிவு வேண்டியிருக்கிறது. அறிவதற்கான திறமை நமக்குள் இருந்தாலும் அதை வெளிக்கொணர வேண்டும். அப்படி ஓர் அறிவை வெளிப்படுத்த மற்றோர் அறிவால்தான் முடியும் என்கிறார் யோகி. உயிரற்ற, உணர்ச்சியற்ற ஜடப்பொருள் அறிவை வெளிப்படுத்த முடியாது. அதற்கு மற்றோர் அறிவு வேண்டும் என்பது யோகியின் கருத்து.

நம்முள் இருப்பதை விழிப்புணர்த்த குருமார்கள் நம்முடன் இருக்க வேண்டும். இத்தகைய குருமார்கள் எப்போதும் தேவை. அவர்கள் இல்லாமல் உலகம் ஒரு போதும் இருந்ததில்லை. அவர்கள் இல்லாமல் எந்த ஞானமும் வராது.

கடவுளே குருமார்கள் அனைவருக்கும் குரு. ஏனெனில் மற்ற குருமார்கள் எவ்வளவு மேலானவர்களாக இருந்தாலும் தேவர்களாக இருந்தாலும் தேவதூதர்களாக இருந்தாலும் காலத்தால் கட்டுப்பட்டவர்கள். கடவுள் அவ்வாறில்லை.

# Bio BIOLOGY Serial Exam

## N.T.GAJENTHIRAN Rank List 2021 வெற்றி நிச்சயம்

| No | Name | School Name | Marks | Rank |
|---|---|---|---|---|
| 01. | Vithunisha Sankar | J/Vembadi Girls' High School | 94.00 | 01 |
| 02. | Srishivani Krishnathasan | J/Vembadi Girls' High School | 92.83 | 02 |
| 03. | Soffiya Maraivaanan | J/Vembadi Girls' High School | 92.83 | 02 |
| 04. | Karnika Nanthakumar | J/Vembadi Girls' High School | 92.75 | 04 |
| 05. | Tharani Rajendran (EM) | J/Vembadi Girls' High School | 85.00 | 05 |
| 06. | Amuthan Sharuja | J/Chavakachcheri Hindu College | 83.50 | 06 |
| 07. | Vithyasini Sriganeshakumar | J/Vembadi Girls' High School | 80.58 | 07 |
| 08. | Suruththika Suthakaran | J/Hindu Ladies College | 80.50 | 08 |
| 09. | Vaishnave Thayananthan | J/Vembadi Girls' High School | 80.00 | 09 |
| 10. | Kishalini Arulnathan | J/Hindu Ladies College | 80.00 | 09 |
| 11. | Kobika Sasikaran | J/Kokuvil Hindu College | 79.92 | 11 |
| 12. | Vergin Shabeena Nelsan | J/Chundikuli Girls College | 79.50 | 12 |
| 13. | Jude Nirmalan Mishel Piraveen | J/Hindu College | 78.50 | 13 |
| 14. | Arthiha Thirukumar(EM) | J/Vembadi Girls' High School | 78.15 | 14 |
| 15. | Rosni Senthilvadivelu | J/Vembadi Girls' High School | 77.75 | 15 |
| 16. | Subramaniam Logithan | J/Chavakachcheri Hindu College | 77.50 | 16 |
| 17. | Thushani Paramanantham (EM) | J/Vembadi Girls' High School | 76.80 | 17 |
| 18. | Ramiya Malarvannan(EM) | J/Vembadi Girls' High School | 75.50 | 18 |
| 19. | Javanika Jegatheeswaran(EM) | J/Vembadi Girls' High School | 75.50 | 18 |
| 20. | Dansiya Sasikumar | J/Hindu Ladies College | 75.17 | 20 |
| 21 | Suntharamoorthy Yathurshany | J/Hindu Ladies College | 74.50 | 21 |
| 22. | Sripriya Thurairasasingam | J/Hindu Ladies College | 73.50 | 22 |
| 23. | Ranganathan Arnikan | J/Hindu College | 73.50 | 22 |
| 24. | Kobika Thevarajan(EM) | J/Vembadi Girls' High School | 72.50 | 24 |
| 25. | Sindoory Sivanesan(EM) | J/Vembadi Girls' High School | 72.50 | 24 |
| 26. | Nitharshana Nirmaleswaran | J/Vembadi Girls' High School | 72.50 | 24 |
| 27. | Sopitha Murugananthan | J/Vembadi Girls' High School | 72.08 | 27 |
| 28. | Sishanuga Pulenthiran | J/Vembadi Girls' High School | 71.92 | 28 |
| 29. | Viveka Sriskantharajah | J/Hindu Ladies College | 71.25 | 29 |
| 30. | Sabarishna Mahendran | J/Uduvil Girls' College | 71.00 | 30 |
| 31. | Biranavy Raveendran | J/Vembadi Girls' High School | 70.58 | 31 |
| 32. | Vinoshajini Vimalendiran | J/Vembadi Girls' High School | 69.50 | 32 |
| 33. | Hamshiga Ramanan | J/Hindu Ladies College | 69.50 | 32 |
| 34. | Umahkaanthan Jathusha | J/Arunodaya College | 69.33 | 34 |
| 35. | Muralitharan Kaviarasan | J/Hindu College | 69.00 | 35 |
| 36. | Danushiya Arutselvar | J/Hindu Ladies College | 68.83 | 36 |
| 37. | Venugoban Rishan | J/Hindu College | 68.75 | 37 |
| 38. | Sasikumar Linuxshan | J/St.John's College | 68.67 | 38 |
| 39. | Angani SooriyaKumaran(EM) | J/Vembadi Girls' High School | 68.65 | 39 |
| 40. | Sanuja Raveendrarajah | J/Vembadi Girls' High School | 68.00 | 40 |
| 41. | Thayalarubiny Kumarasamy | J/Vembadi Girls' High School | 67.92 | 41 |
| 42. | Kirushika Thavanesan | J/Vembadi Girls' High School | 67.41 | 42 |
| 43. | Arane Indrajit | J/Vembadi Girls' High School | 67.33 | 43 |
| 44. | Nithusha Vijayakumar | J/Hindu Ladies College | 67.00 | 44 |
| 45. | Sivasithamparam Sugarna | J/Chavakachcheri Hindu College | 67.00 | 44 |
| 46. | Athmiga Thevagnanan | J/Vembadi Girls' High School | 67.00 | 44 |
| 47. | Thakshaji T | J/Chundikuli Girls College | 66.25 | 47 |
| 48. | Vaishnavi Uthayakumaran | J/Uduvil Girls' College | 66.08 | 48 |
| 49. | Suvethika Pasupatheeswaran | J/Vembadi Girls' High School | 66.00 | 49 |
| 50. | Nithiyananthan Maathavan(EM) | J/Hindu College | 66.00 | 49 |
| 51. | Jeyendran Rithursika | J/Kokuvil Hindu College | 65.42 | 51 |
| 52. | Vithursana Suthagar | J/Chundikuli Girls College | 65.00 | 52 |
| 53. | Kanakalingam Kajarupan | J/Central College | 64.67 | 53 |
| 54. | Tharanghini Sarveswaran | J/Hindu Ladies College | 63.25 | 54 |
| 55. | Thayaani Thavachelvan | J/Hindu Ladies College | 62.50 | 55 |
| 56. | Tharabalasingam Anutharshan | J/Hindu College | 62.50 | 55 |
| 57. | Theivigaa Arumugathasan(EM) | J/Vembadi Girls' High School | 62.50 | 55 |
| 58. | Anoosika Arunkalaichelvan(EM) | J/Vembadi Girls' High School | 62.50 | 55 |
| 59. | Jegatheeswaran Sarushan | J/Hindu College | 62.50 | 55 |
| 60. | Priyanka Rubaharan | J/Chundikuli Girls College | 62.50 | 55 |
| 61. | Prathapan Nilogini | J/Vembadi Girls' High School | 62.08 | 61 |
| 62. | Laksia Paraparan | J/Hindu Ladies College | 62.00 | 62 |
| 63. | Jeyakumar Kajalapriya | J/Hindu Ladies College | 61.50 | 63 |
| 64. | Suresh Thenuja | J/Mahajana College | 61.50 | 63 |
| 65. | Sainthavy Majilvakanam | J/Uduvil Girls' College | 61.50 | 63 |
| 66. | Santhoshi Amithalingam | J/Hindu Ladies College | 61.00 | 66 |
| 67. | Thusharaha Satheeskaran | J/Hindu Ladies College | 61.00 | 66 |
| 68. | Dirusika Balasubramaniam | J/Hindu Ladies College | 61.00 | 66 |
| 69. | Shathusnavi Ratnaruban | J/Chavakachcheri Hindu College | 61.00 | 66 |
| 70. | Arani Sivasakthivel | J/Vembadi Girls' High School | 60.42 | 70 |
| 71. | Vinuja Selvarasa | J/Vayavilan Central College | 60.00 | 71 |
| 72. | Indirakumar Thanusikan | J/Chavakachcheri Hindu College | 59.58 | 72 |
| 73. | Samthavachelvam KevinRockman | J/St.John's College | 59.58 | 72 |
| 74. | Rajeeka Ravichandran | J/Ramanathan College | 59.50 | 74 |
| 75. | M.S.Samla Kanath | | 59.50 | 74 |
| 76. | Thayalaneethiny Kumarasamy | J/Vembadi Girls' High School | 59.25 | 76 |
| 77. | Harnika Babu | J/Manipay Ladies College | 59.00 | 77 |
| 78. | Sanoja Nalliah | J/Vembadi Girls' High School | 59.00 | 77 |
| 79. | Yathavi Thiyagarasa | J/Hindu Ladies College | 59.00 | 77 |
| 80. | Akilan Arabi | J/Vembadi Girls' High School | 58.85 | 80 |
| 81. | Pavapragashini P | J/Hindu Ladies College | 58.67 | 81 |
| 82. | Thevarajan Kobiram(EM) | J/Hindu College | 58.50 | 82 |
| 83. | Nilani shanmugarajah | J/Uduvil Girls' College | 58.50 | 82 |
| 84. | Abinaya Kathirgamanagarasha | J/Kokuvil Hindu College | 58.50 | 82 |
| 85. | Senthury Paramanantham | J/Vembadi Girls' High School | 58.17 | 85 |
| 86. | Sharanja Vasanthakumaran | J/Uduvil Girls' College | 57.50 | 86 |
| 87. | Gobika Sarveswaran | J/Vembadi Girls' High School | 57.50 | 86 |
| 88. | Sneka Eswaran | J/Hindu Ladies College | 57.00 | 88 |
| 89. | Sathursika Pukaneswaran | J/Chankanai Saivapragasa M V | 57.00 | 88 |
| 90. | Selvakumar Pirakashini | J/Manipay Ladies College | 57.00 | 88 |
| 91. | Karuna Vanujan | J/Vayavilan Central College | 56.67 | 91 |
| 92. | Jeyamohan Sanmugapriyan | J/Hindu College | 56.50 | 92 |
| 93. | Sivanja Sivakumar | J/Kokuvil Hindu College | 56.33 | 93 |
| 94. | Niruthan Paranthaman(EM) | J/Hindu College | 56.00 | 94 |
| 95. | Suthakaran Nirushan | J/Hindu College | 56.00 | 94 |
| 96. | Karsana Yogeswaran | J/Chundikuli Girls College | 56.00 | 94 |
| 97. | Pranavi Vasanthakumaran | | 55.50 | 97 |
| 98. | Jothirajan Banupiriya | J/Arunodaya College | 55.00 | 98 |
| 99. | Umashankar Varajith | J/Hindu College | 54.50 | 99 |
| 100. | Thiruloganathan Gowreeshan | J/Hindu College | 53.83 | 100 |
| 101. | Vishnukanthan Kethaakini | J/Vembadi Girls' High School | 53.83 | 100 |
| 102. | Suthan Tharun | J/Vayavilan Central College | 53.17 | 102 |
| 103. | Suntharamoorthy Sankavi | J/Hindu Ladies College | 53.08 | 103 |
| 104. | Thayalan Tharujan | J/Hindu College | 53.00 | 104 |
| 105. | Lathushah Murugananthan | J/Chundikuli Girls College | 52.91 | 105 |
| 106. | Sivakumar Sivahajan | J/Hindu College | 52.50 | 106 |
| 107. | Jayeswaran Thilakshan | Jaffna College | 52.50 | 106 |
| 108. | Vithursha Punniyamoorthy | J/Vembadi Girls' High School | 52.00 | 108 |
| 109. | Judit Luxshana Geroge Simon | J/Chundikuli Girls College | 52.00 | 108 |
| 110. | Shampavi Mohanarajan | J/Vembadi Girls' High School | 51.92 | 110 |
| 111. | Praveena Sivakumar | J/Vembadi Girls' High School | 51.83 | 111 |
| 112. | Senthilnathan Kajaruban | J/Hindu College | 51.83 | 111 |
| 113. | Marysneka Jeyakumar | J/Vembadi Girls' High School | 51.50 | 113 |
| 114. | Lawoshy Iyanicka Kadhirselvan | J/Vembadi Girls' High School | 51.00 | 114 |
| 115. | Jeyaratnarajah Sanjayan | J/Kokuvil Hindu College | 51.00 | 114 |
| 116. | Jeyarajan Sangeethan | J/Hindu College | 51.00 | 114 |
| 117. | Nithushanthini Mahendrarajah | J/Chundikuli Girls College | 50.50 | 117 |
| 118. | Preamkumar Priyamekala | J/Vayavilan Central College | 50.50 | 117 |
| 119. | Nivethiga Jeyanthan | J/Hindu Ladies College | 50.42 | 119 |
| 120. | Sivaparanika Sivakumaran | J/Kokuvil Hindu College | 49.50 | 120 |
| 121. | Vithusha Thushyanthan | J/Uduvil Girls' College | 49.50 | 120 |
| 122. | Shanmugarasa Subapriyan | J/Hindu College | 49.50 | 120 |
| 123. | Loganathan Thushan | J/uUnion College | 49.42 | 123 |
| 124. | Kalanantharasan Sathurgini | J/Hindu Ladies College | 49.33 | 124 |
| 125. | Shahana Kanabalan | J/Vembadi Girls' High School | 48.75 | 125 |
| 126. | Sadhurthika Langesan | J/Hindu Ladies College | 48.50 | 126 |
| 127. | Sinthuja Kasinathan | J/Hindu Ladies College | 48.33 | 127 |
| 128. | Jaganathan Kamsa | J/Chankanai Saivapragasa M V | 48.00 | 128 |
| 129. | Sathiyarubhiny Sanmugarasa | J/Hindu Ladies College | 47.83 | 129 |
| 130. | Jenotha Sivapatham | J/Kokuvil Hindu College | 47.50 | 130 |
| 131. | Thayakaran Kamsajini | J/Hindu Ladies College | 47.33 | 131 |
| 132. | Sivaluxshiya Sasiruban | J/Vembadi Girls' High School | 47.00 | 132 |
| 133. | Mugunthan Tharmiya | J/Chavakachcheri Hindu College | 46.50 | 133 |
| 134. | Premkumar Giriparan | J/Hindu College | 46.50 | 133 |
| 135. | Sharutha Kalanathan | J/Vembadi Girls' High School | 46.50 | 133 |
| 136. | Sivaranjani Sivanesasarma | J/Hindu Ladies College | 46.50 | 133 |
| 137. | Saththiyaseelan Pirathap | J/Hindu College | 46.00 | 137 |
| 138. | Vaishnavy Gopalapillai | J/Hindu Ladies College | 46.00 | 137 |
| 139. | Koneswaran Darsika | J/Hindu Ladies College | 46.00 | 137 |
| 140. | Gnanavel Nerojan | Jaffna College | 46.00 | 137 |
| 141. | Marisilin Bijoslin | J/St.John's College | 45.83 | 141 |
| 142. | Suventha Kulasabanathan | J/Vembadi Girls' High School | 45.75 | 142 |
| 143. | Vivekananthan Mohanamurali | J/Hindu College | 45.67 | 143 |
| 144. | Mithushalini Sachithananthan | J/Union College | 45.50 | 144 |
| 145. | Abishalini Vasan | J/Hindu Ladies College | 45.50 | 144 |
| 146. | Dilakshana Sivakumar | J/Kokuvil Hindu College | 45.25 | 146 |
| 147. | Vasmi Vijayakumar | J/Hindu Ladies College | 45.00 | 147 |
| 148. | Pakeerathan Thilaxshana | J/Arunodaya College | 45.00 | 147 |
| 149. | Mathumitha Puvaneswaran | J/Chundikuli Girls College | 44.50 | 149 |
| 150. | Dhanushan T | J/Hindu College | 44.42 | 150 |
| 151. | Gunaseelan Ketharani | J/Kokuvil Hindu College | 44.00 | 151 |
| 152. | Uthayakumar Thenmoly | J/Arunodaya College | 43.67 | 152 |
| 153. | Ganesan Vinoja | J/Vembadi Girls' High School | 43.58 | 153 |
| 154. | Kajaani Suthas | J/Vayavilan Central College | 43.50 | 154 |
| 155. | Amshavy Eswaran | J/Chundikuli Girls College | 43.50 | 154 |
| 156. | Ashvini Sathyanathan | J/Vayavilan Central College | 43.00 | 156 |
| 157. | Lakshana Thiyagarasa | J/Chankanai Saivapragasa M V | 42.50 | 157 |
| 158. | Jathusanan Pirapanantham | J/Kokuvil Hindu College | 42.25 | 158 |
| 159. | Marooya Mahendiran | J/Hindu Ladies College | 42.00 | 159 |
| 160. | K Mohithan | J/Central College | 41.67 | 160 |
| 161. | Piranavi Sritharan | J/Uduvil Girls' College | 41.50 | 161 |
| 162. | Keshini P | | 41.50 | 161 |
| 163. | Shanker Kabishan | J/Hindu College | 41.25 | 163 |
| 164. | Navaneetharaja Thiviya | J/Hindu Ladies College | 41.25 | 163 |
| 165. | Shanmugalingam Priyanka | J/Uduvil Girls' College | 41.00 | 165 |
| 166. | Kajaluxsan Ketheeswaran | | 40.92 | 166 |
| 167. | Kirubakaran Sivajanani | J/Hindu Ladies College | 40.50 | 167 |
| 168. | Yarlventhan Mathushan | J/St.John's College | 40.00 | 168 |
| 169. | Dilany Shanmuganathan | | 40.00 | 168 |

NEW SCIENCE WORLD
NEW SCIENCE WORLD
Brown Road, Jaffna.

## இயக்கச்சியில்...

குளத்திற்கு அருகாமையில் இவ்விபத்து இடம்பெற்றது:

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வந்த பயணிகளுடன் மீண்டும் கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்தும் எதிராக கிளிநொச்சியில் இருந்து பளைப் பகுதிக்கு இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டுள்ளன.

இந்த விபத்துச் சம்பவத்தில் திருமணம் முடிந்து 5 மாதங்களேயான இளம் குடும்பஸ்தரான வடமராட்சி கிழக்கு மாமுனையைச் சேர்ந்த குணசீலன் பிறேம்குமார் (வயது - 26) என்பவரும் அவருடன் கூடப் பயணித்த அதே இடத்தைச் சேர்ந்த ரவீந்திரராசா ரவீந்திரகுமார் (வயது - 34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையுமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு சென்ற பளைப் பொலிஸார் சிறிது நேரம் தடைப்பட்டு இருந்த போக்குவரத்தை சீர்படுத்தியதுடன் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோதனைகளுக்காக ஒப்படைத்துள்ளதுடன் விபத்திற்குள்ளான பேருந்தின் சாரதியை கைது செய்துள்ளதுடன் விபத்துக்குள்ளான வாகனங்களை பளைப் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,15,60,316)

## இலங்கையின்...

தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் இலங்கையர்களே.

இந்த விடயம் எமது நாட்டிற்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட விடயமல்ல. இந்த வலயத்திலுள்ள ஏனைய நாடுகளின் நன்மைக்காக இந்தப் பயங்கரவாதத்தை நாங்கள் இல்லாதொழிக்க வேண்டும்.

இந்த வருடம் இலங்கையில் பயங்கரவாதிகள் படகு மூலம் இந்தியாவிற்குள் பிரவேசிக்க முயற்சித்ததாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து இந்தியா முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

எம்மால் இதனை கட்டுப்படுத்த முடியாமையால் இந்தியா, மாலைதீவு மாத்திரமின்றி மியன்மார், தாய்லாந்து உட்பட அதனை அண்மித்துள்ள நாடுகளுக்கும் பாரிய அச்சுறுத்தல் காணப்பட்டது. அதனால் இந்த புதிய பயங்கரவாத அச்சுறுத்தலை தோற்கடிக்க வேண்டும்.

எமது இராணுவப் படைகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் சில வெளிநாட்டுத் தரப்புகள் எதிர்க்கும் நிலைப்பாடுகளும் காணப்படுகின்றன.

தமது இராணுவத்தின் உள்விவகாரத்தினுள் வெளிநாட்டுத் தலை யீடுகளை மேற்கொள்ள இறையாண்மை உள்ள நாடுகள் அனுமதிப்பதில்லை என்றார். (ம-3)

## உழவுஇயந்திரத்...

பெற்றுள்ளது

இந்த விபத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான காந்தி ஜெயந்தீபன் (ரகுநாதன்) வயது 48 என்பவரே மரணமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,114)

## இலங்கைத்...

லேயே இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்படவில்லை என பாரதிய ஜனதா கட்சி அறிவித்துள்ளது.

புதுக்கோட்டையில் அமைந்துள்ள அ.தி.மு.க கட்சி அலுவலகத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயலாளர் ஹெச். ராஜா இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

குடியுரிமை சட்டத்திருத்தத்தால் தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு எந்த பிரச்சினையும் ஏற்படாது எனவும் கூறினார். (ம-3)

## சி.ஐ.டியில் முன்...

சி.ஐ.டிக்கு உத்தரவிடும்படி கானியாவின் சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளை நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

சுவிஸ் தூதரகம் வெளிநாட்டு தூதரகம் என்பதால் அந்த கோரிக்கையை பரிசீலிக்க முடியாதென நீதிபதி குறிப்பிட்டார்.

தகுதிவாய்ந்த மனநல வைத்தியர் குழுவின் முன்பாக கானியாவை முன்னிலைப் படுத்தவும் நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

வரும் 16ஆம் திகதிக்கு முன்னதாக அனைத்து விசாரணைகளும் பூர்த்தியாகுமென சி.ஐ.டி தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் அடுத்த விசாரணை வரும் 17ஆம் திகதி இடம்பெறும். (ம-3)

## இலங்கை பௌத்...

பாதுகாப்பு செயலாளராக பொறுப்பேற்ற பின்னர் முதன்முறையாக யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த கமால் குணரட்னவை பலாலி விமான நிலையத்தில் பாதுகாப்பு படைத் தளபதிகள் வரவேற்றனர்.

பலாலி விமானப்படைத்தளத்தில் 3,000 இற்கும் அதிகமான முப்படையினர், பொலிஸார் மத்தியில் உரையாற்றிய கமால் குணரட்ன, விடுதலைப் புலிகள் மீண்டும் தோன்ற முயற்சிக்கும் காலகட்டத்தில், தீவிரவாத இளைஞர்கள் குழு தங்கள் மதத்தை தவறாக விளங்கி, நாட்டின் அமைதியான சூழ்நிலையை சீர்குலைக்க முயற்சிக்கும் ஒரு நேரத்தில், இதுபோன்ற செயல்களில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதில் உளவுத் துறைக்கு பெரும் பங்கு உண்டு.

முஸ்லிம் தீவிரவாதிகள் குழு நாட்டு மக்கள் மத்தியில் அச்சத்தையும் சந்தேகத்தையும் உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை அழித்து, நாட்டில் அழிவை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்களைக் கண்டுபிடிக்க சிறப்பு விசாரணை தேவை.

இலங்கை ஒரு பௌத்த நாடு. மக்கள் தங்கள் மதத்தை பின்பற்ற சுதந்திரம் இருக்க வேண்டும். மேலும் அனைத்து இனத்தவர்களும் கண்ணியமாக வாழ உகந்த சூழலை உருவாக்குவது நமது கடமையாகும்

12,000 க்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸாரின் நலன் குறித்து ஆராய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம். எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் அல்லது சவால்களை எதிர்கொள்ள பயிற்சி அளிக்கப்பட்டுள்ளோம் என்றார். (ம-3)

## இராணுவத்...

பக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் இராணுவ கல்லூரி பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை தாமரை தடாக கலையரங்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்பினை முழுமையாக இல்லாதொழித்த இராணுவத்தினருக்கு ஆயுதமேந்திய தலைவராக செயற்பட்டமையினை இட்டு சர்வதேச மட்டத்தில் பெருமையடைந்துள்ளேன். இதன் சிறப்பு இராணுவத்தினரையே சாரும்.

தீவிரவாதம் சர்வதேச மட்டத்தில் தாக்கம் செலுத்தியிருந்த வேளை யுத்தத்தை நாம் வெற்றி கொண்டோம். அது சர்வதேசத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்தது. 2008 ஆம் ஆண்டு அமெரிக்காவின் எஸ். பி. ஐ நிறுவனம் விடுதலைப் புலிகள் அமைப்பு பலம் வாய்ந்த ஒரு தீவிரவாத அமைப்பு என்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் தாக்கம் அமெரிக்காவில் இடம் பெறவில்லை ஆனால் அவர்கள் அந்த அமைப்பை சர்வதேச பலம் வாய்ந்த அமைப்பாக கருதினர்.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பு முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டது. அதுவரை காலமும் 30 வருட கால யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வர முடியாது என்று பல நாடுகளின் இராஜதந்திரிகளும் குறிப்பிட்டார்கள். முடியாத ஒரு விடயத்திற்கு முயற்சிகளை மேற்கொள்வது பயனற்றது என்றும் எடுத்துரைத்தார்கள். இருப்பினும் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்ற இலக்கில் எவ்வித மாற்றத்தியையும் ஏற்படுத்தவில்லை. அந்த வேளையிலும் பல நெருக்கடிகள் காணப்பட்டன.

2005ம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து யுத்தத்தை விரைவாக முடிவிற்கு கொண்டு வந்து அபிவிருத்தியில் முன்னேற வேண்டும் என்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. இராணுவம், புலனாய்வு பிரிவு பலப்படுத்தப்பட்டது. பாதுகாப்பு செயலாளராக கோட்டாபய ராஜபக்ஷ நியமிக்கப்பட்டு யுத்தம் துரிதகரமாக நடைபெற்றது. இன்று அவரை நாட்டு தலைவராக மக்கள் தெரிவு செய்துள்ளமை பாரிய வெற்றியாகும் என்றும் அவர் கூறினார். (ம-3)

## இந்தியாவிலுள்ள..

எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இது தொடர்பாக தமிழகம் சார்பில் மத்திய அரசிடம் சுட்டிக் காட்டப்பட்டதுடன் ஈழத் தமிழ் அகதிகள் விடயத்தில் கரிசனை காட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவும், இலங்கையில் அவர்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுக்கவும் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அகதிகள் விடயத்தில் தமிழர் தரப்பின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளதென வினவப்பட்டபோதே இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா இதனைக் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், “அகதிகள் விடயத்தில் நாம் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருகின்றோம். குறிப்பாக இந்தியாவில் உள்ள இலங்கை தமிழர்கள் விடயத்தில் அவர்களை மீண்டும் இலங்கைக்கு வரவழைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம் என்றார். (ம-3)

## இரணைமடுவின்...

குளத்தின் நீர்மட்டம் 35.11 அடியாக உயர்வடைந்துள்ளது.

நீர்மட்டத்தின் அதிகரிப்பு காரணமாக நேற்யை தினம் 10 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. (ம-3,10)

## நுளம்புப் பெருக்...

சாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம-3)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 13-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2329
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 45 48 62 76
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/12/13
சீட்டிழுப்பு இலக்கம் 4069
ஆங்கில எழுத்து K
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 9 1 4 0 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2019.12.13
சீட்டிழுப்பு இலக்கம் - 238
P 20 45 50 62
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

மெகா பவர்
திகதி 2019/12/13
சீட்டிழுப்பு இலக்கம் 0471
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
Y 6 17 45 68 76

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 820
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.12.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 73,153,910/-
வெற்றி இலக்கங்கள் 04 09 46 74
ஆங்கில எழுத்து V
அபிவிருத்தி லொத்தர் சபை
0112 333 546-47
0114 825 825
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 13/12/2019 வெற்றி வாரம் 2706 வர்ணம் கருநீலம்
வெற்றி இலக்கங்கள் இடபம் 14 34 35 37
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000
2019/12/14 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

சீட்டிழுப்பு வாரம் 532
வர்ணம் பச்சை
திகதி 13.12 2019 வெள்ளி
M 04 10 14 36
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,159,660
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

சங்வர்தன வாசனாவ
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 305
சீட்டிழுப்பு திகதி 13.12.2019 சிவப்பு
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 09 23 60
விதி எண் 9
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 48,367,232
2019.12.18 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

# Techno World

(பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)

**A/L 2018 தொழில்நுட்பப்பிரிவில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லும் 68 மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.**

அனைத்து மாவட்டங்களிலும் முதலிடம் TECHNO WORLD மாணவர்களே

உயிர்முறை தொழில்நுட்பம்

| பெயர் | மாவட்ட நிலை |
|---|---|
| கலக்சிகா | 01 (யாழ்ப்பாணம்) |
| ரஜிதா | 01 (முல்லைத்தீவு) |
| விதுர்சன் | 01 (கிளிநொச்சி) |

## A/L 2022
## தொழில்நுட்பப் பிரிவு

விரைவில் ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்

(C-8535)

நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
A/L 2022 மாணவர்களுக்கான அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

**0770175346, 0771703549**



## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் எலக்ரோனிக்ஸ் கடைக்கு வேலையாட்கள் தேவை. ஆண் 18 – 40, பெண் 18 – 25 ஆர்வமுள்ளவர்கள் நேரில்வரவும்.
No.26 K கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6807 070 304 3633 (1477)

## விற்பனைக்கு

தேக்கு மரத்திலான கட்டில், கதிரை சாப்பாட்டு மேசை, சோபாசெற்றி, அலுமாரி என்பன உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 070 304 3636
070 304 3647
(1477)

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK – 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg

(C-8115)

0768226240

V2 TRAVELS

## கடை விற்பனைக்கு

இல.31–1ம் மாடி
மாநகரசபைக் கட்டிடம்,
கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொடர்பு -
077 390 2087
(C-8536)

## தேவை

ஜேர்மன்
மொழி கற்பிப்பதற்கு
ஆசிரியர் தேவை.
தொடர்பு -
077 104 1923
(C-8537)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



076 443 1576

## அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8377)

## ஆரம்பம்

O/L
எழுதிய மாணவர்களுக்கான விசேட
ஆங்கில பயிற்சி நெறி
04 Month Spoken English Grammar
0760579999
CTHI
(C-8337)



# KINGS ELECTRONICS (PVT) LTD

CHRISTMAS & NEW YEAR SPECIAL OFFERS

LIMITED SPECIAL OFFER

ELECTRONICS / FURNITURES / BABAY CARE / TOYS / LIGHTS

## மாபெரும் மலிவு விற்பனை JANUARY 10 வரை

மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

**10% - 40% OFF**

SOFA 1+1+3 FULL SET RS.32,900



5 YEAR WARRANTY

LHD-677 LG
RS.33,900



MEGA SEASON SALE
LIMITED TIME OFFER

LED TELEVISIONS

3 YEAR WARRANTY



| | |
|---|---|
| Samsung 32" | -28900/= |
| Hisense 32" | -20900/= |
| Sony 32" | -29900/= |
| Video con 32" | -19900/= |
| Panasonic 32" | -22900/= |
| Maxmo 32" | -17990/= |
| Innovex 32" | -19250/= |
| Innovex 40" | -39900/= |
| Maxmo 40" | -39500/= |
| Hisense 50" | -91900/= |



LG
Washing Machine
RS.58,900

MX-L90
PARTY SPEAKER
RS.23,400

LG~LHD457
RS.26,900



SINGER
SWM-SAR6
RS.23,500

Hisense 55 4K SMART
RS.129,900 ONLY

HITACHI 43" FULL HD
RS.49,500 ONLY

SAMSUNG 43" 4K SMART
RS.95,000 ONLY



SAMSUNG RT28K
REFRIGERATOR
RS.73,900
INVERTER

INVERTER
LG
REFRIGERATOR
RS.69,900

REFRIGERATOR
RS.40,900
SAMSUNG R19

076-3594665 KINGS JAFFNA 12,Point Petro Road,Jaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.